www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர்: 35

CHANCHIVE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1996

மலர்:35

பக்கம்: உள்ளடக்கம்:

3. நோக்கு
5. வசந்தம் தொலைந்த காலம். கவிதை
6. கண்டதும் களித்ததும்.. கட்டுரை.
11. ரீனாவுக்கு என்ன? சிறுகதை.
15. ஓர் செய்தி. கவிதை.
16. நிகழ்வுகள்....சந்திப்பு.
21. கர்ப்பவதியும் கருவளர்ச்சியும். கட்டுரை.
24. உன் கண்களும் நானும். கவிதை.
30. கடிதம்.
31. பகுத்தறிவாளர் டாக்டர் ஏப்ரகாம் ரீ.கோவூர்.கட்டுரை
36. குர்திஸ்தான் விடுதலையும் கவிதையும்.
40. நதி ஓட்டம். கவிதை.
41. மறுதலி. சிறுகதை.
46. ஏக்கம். கவிதை.

அட்டைப்படக் கவிதை : எம்.சி.லோகநாதன்.

புதிய முகவரி:......

**CHANCHIVE**
**NYGADE 22**
**7500 HOLSTEBRO**
**DENMARK.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அகதி அந்தஸ்த்துக்கோரி காத்திருந்த சித்திரா இராசேந்திரம் என்ற பெண் இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டமை பற்றி சகல மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தப் பட்டமை குறைந்த பட்சம் யாவரும் அறிந்ததே. சித்திரா இராசேந்திரம் அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டார்..

அத்துடன் சித்திரா இராசேந்திரம் அவர்கள் டென்மார்க்கில் அகதியாய் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பாகவே அவர் தங்கி யிருந்த இடத்தின் பாடசாலையில் கல்வி பெறுவதற்கான அனுமதியினை அப்பாடசாலையின் அதிபர் வழங்கியிருந்தமையால், அவர் கல்வி கற்றும் வந்தார். இதன் போது அவரது தஞ்சம் கோரலானது நிராகரிக்கப்பட்டு, நாடுகடத்தப்படும் விடையமானது ஆரம்பமானதும் பாடசாலை அதிபரும், சக மாணவர்களும் சித்திராவினை நாடுகடத்தக் கூடாதென பெரிதும் போராடினர். இவ்வகையில் மக்கள் தொடர்பு சாதனங்கள் இவரது பிரச்சினையினை இந் நாடுகடந்தும் பெரிதுபடுத்திக் காட்டியிருந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இவர் போன்று பலர் ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டிருந்தும், அவர்கள் விடயத்தில் இந்த மக்கள் தொடர்பு சாதனங்களதோ, டெனிஸ் மக்களதோ அனுசரணை இல்லாது போனதால் அவர்கள் பற்றி எதுவித சலனங்களும் இங்கு ஏற்பட்டிருக்கவில்லை. அவ்வப்போது முகாம் களில் அகதித் தஞ்சம் கோரியிருந்தோர் மத்தியில் உண்ணாவிரதப் போராட்டங்களும், சில சந்திப்புக்களும் நடாத்தப்பட்டும் இருந்தன. அப்படி திருப்பி அனுப்பப்பட்டவர்கள் பலர் இலங்கை அரசால் மறியல் வைக்கப் பட்டுமுள்ளனர்.

மற்றும் தஞ்சம் கோரி காத்திருப்போர்களில் இதுவரை பதில் கிடைக்காதோரும், நிராகரிக்கப்பட்டு மீள் பரிசீலனைக்காக மனுத்தாக்கல் செய்து காத்திருப்போர் மத்தியிலிருந்து பலருக்கு எப்போதும் தாம் நாடு கடத்தப்படலாம் என்ற பயமும் பதட்டநிலையும் உருவாகியுள்ளதுடன் இதுவரை 50 பேருக்கும் மேற்பட்டோர் எதுவித தகவலுமின்றி காணமற் போயுள்ளதாகவும் அறியக்கிடக்கிறது. இப்படி டென்மார்க்கிற்கு வந்து தஞ்சம் கோரியவர்களில் ஒருபகுதியினர் இலங்கை - இந்தியா - ஆபிரிக்கா போன்ற நாடுகளூடாகவும், மறுபகுதியினர் ஏற்கனவே வேறு ஐரோப்பிய நாடுகளில் ஏற்கப்பட்டும், நிராகரிக்கப்பட்டுமிருந்தவர்கள் என அவர்கள் மீதான கருத்துக்கள் டெனிஸ் மக்கள் மத்தியிலும் பரந்துகிடக்கின்றன.

எது எப்படி இருப்பினும் சொந்த நாட்டிலேயே அகதிவாழ்வு தொடர்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில் பல கஸ்ட்டங்கள், பிரச்சனைகள் மத்தியிலும் முடிந்தவர்கள் இலட்சக்கணக்கான பணத்தினை திரட்டி எத்த னையோ இடர்பாடுகளுக்கு மத்தியில் இப்படி வந்தும் சில கணப்பொழுதில் அவர்களது வாழ்வின் எதிர்பார்ப்புக்கள் சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றது.

இன்றைய டென்மார்க்கின் சூழ்நிலையினைப் பொறுத்தவரையில் இங்கு வாழும் தமிழர்களால் தனிப்பட்ட முறையிலோ அல்லது தமிழ்ச் சங்களினாலோ அல்லது வேறு அமைப்புகளினாலோ இங்கு முகாம்களில் முடங்கிக் கிடக்கும் எங்கள் சகோதரர்களிற்கு எதையுமே செய்ய முடியாமல் இருக்கின்றது. உண்ணாவிரதம் இருந்த சந்தர்ப்பத்தில் பலர் தனிப்பட்ட முறையில் தங்களின் அறிமுகத்தினைப்பயன்படுத்தி பலவித முயற்சிகள் எடுக்கப்பட்டும் எதுவும் பலனளிக்காமல் போயிற்று. அரசு தனது முடிவில் எந்த மாற்றமுமில்லை என உறுதியாக கூறிவிட்டது. இருப்பினும் டெனிஸ் மக்கள் மத்தியில், தனிப்பட்ட முறையிலோ அல்லது அமைப்பு ரீதியிலோ எங்கள் நாட்டின் இன்றைய உண்மைநிலையினை வெளிப்படுத்தி அவர்கள் மூலமாக எங்கள் பிரச்சினையினை அரசிற்கு கொண்டு வர வேண்டும். இப்படி ஒரு முயற்சி பல கோணங்களிலும் நடைபெறும் சந்தர்ப்பத்தில் அரசின் முடிவில் மாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

-சஞ்சீவி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வசந்தம் தொலைந்த காலம்

சந்தோசப் புயலாகும்
சித்திரை தலைச்சோளகம்
சோளகத்தின் தழுவலிலே
தலையாட்டும் பனை,தென்னை
பனை, தென்னை நிழல்களிலே
நாலு நிறப்பூச் சொரியும் நாயுண்ணிப் பூக்காடு.......

வானம் தொடும் மாயமாய்
நீலமாய் தூங்கும் கடல் கூட
அலை அசைந்து நுரை எழும்பும்
வசந்த காலம் இப்போ
எங்கள் பூமியிலே !

பூமியும் அழகுதான், வானமும்
வண்ணம்தான்......
எங்கள் மக்களோ ?
வசந்தம் தொலைத்த காலமாய்
காலைகள் விடிவது சாவுக்காய்
மாலைகள் என்பது மரணத்துக்காய்
அவியாத நெருப்புக்குள்
அந்தரித்து வாழ்கின்றார்.

இறப்பிலும் மரண இருளிலும்
இருப்பவர் மீள்வது எப்போ ?
சிலுவைகள் தாங்கி
முள்முடி தரித்து செத்திடும் வாழ்வு
உயிர்த்திடும் நாள் எப்போ ?

செல்வம்

வைகாசி/1986

www.tamilarangam.net

# கண்டதும் களித்ததும்...



செ.வே.கமலநாதன்.

தமிழர் புலம்பெயர்ந்த காலகட்டத்திலிருந்து ஆங்காங்கு பாரம் பரிய, நவீன நடன நிகழ்ச் சிகள் இசை நிகழ்ச்சிகள் என மேடை யேற்றப்பட்டதை நாமெல்லோரும் அறிவோம். ஆங்காங்கு பரத நாட்டியத்தை கற்பிக்கும் ஆசிரி கைகள் தமது மாணவ மாணவி யரைத் தனித்தனியாகவும் குழுக்க ளாகவும் மேடையேற்றி எல்லோ ரதும் கலைத்தாகத்தை தணித்து வந்தது கலாரசிகர்களின் பாக்கிய மென்பதில் ஐயமில்லை. 30.8.1996 சனிக்கிழமை கேர்ணிங் நகரில், டென்மார்க்கில் முதன் முறையாக முறைப்படி பரத நாட்டியம் பயின்ற மாணவியொருவரின் அரங்கேற்றம் இனிதே சிறப்புற நிறைவேறியது.

அன்று அரங்கேறிய செல்வி. யாழினி Skjern நகரை வாழிடமாகக் கொண்ட திரு திருமதி. பால்ராஜ் அவர்களின் புதல்வியும், கீதாலய கலைக் கல்லூரியின் ஆசிரியை திருமதி. மாலா சத்தியமூர்த்தி யின் மாணவி யுமாவார். செல்வி. யாழினி தனது ஆரம்பகாலப் பயிற்ச்சியை திருமதி. லீலா ஆறுமுகையாவிடமிருந்து பெற்றுக் கொண்டவராவார்.

முதலாவது நடன அரங்கேற்றம் தொடர்ந்து வரும் அரங்கேற்றங்களுக்கு முன்னோடியாக அமைவதால் நிகழ்வுகள்

www.tamilarangam.net

நிதானமாகச் சீர்தூக்கி ஆராயப்படுதல் அவசியமாகிறது.

நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்ட நேரத்தில் சாஸ்த்திர விதிகளுக்கமைய, மங்கலவிளக்கேற்றம், வழிபாடு, மாதா, பிதா, குரு, இறை வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. எந்தவொரு கலைஞருக்கும், நல்லதோர் குரு அமைவதும், ஊக்கமும் ஆதரவும் நல்கும் பெற்றோர்களுக்கு பிள்ளையாகப் பிறப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வ அனுக்கிரகம் சேர்ந்துவிடுவதும் அவாகள் பூரணமாக மிளிர வேண்டிய ஏதுக்களாகின்றன. செல்வி யாழினிக்கு இவையனைத்தும் நன்றாகவே கைகூடியமைந்திருந்ததை அன்று அவரின் நடனத்தை கண்டு களித்தவர்கள் உணர்ந்திருப்பர். அவர் அரங்கேற்றிய கலை தொடர்ந்து சிறப்புற மிளிர ஊக்கமும் ஆதரவும் அளிக்கக்கூடிய புரிந்துணர்வு கொண்ட வாழ்க்கை துணையும் அவருக் கமைய எல்லாம் வல்ல எம்பெருமான் வழிகாட்டுதல் வேண்டும்.

செல்வி யாழினி அரங்கேற்றுவதற்கு முன்பாக நாட்டில் பல பாகங்களிலும் ஆங்காங்கு நடனமாடியதுண்டு. சில மாதங்களின் முன் Skanderborg நகரில் திருமதி மாலா சத்தியமூர்த்தியின் மாணவிகள் ஒரு சிறு நாட்டிய நாடகமொன்றினை வழங்கினர். அந்நாட்டிய நாடகம் 86ம் ஆண்டு பொங்கல்த் திருநாளின் போது சென்னைத் தொலைக்காட்சியில் மூன்று தலை சிறந்த இந்திய நாட்டிய மணிகளால் ஆடப்பட்டது. யாழினியின் பாத்திரத்தை அன்று பார்த்த போது நமது இளம் செல்வி யர்கள் பாரத நாட்டிய மணிகளுக்கு ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல மகிழ்வும் நிறைவும் ஏற்பட்டது. இவ்வாறான ஆற்றல் உள்ள மாணவியின் அரங்கேற்றத்தினை பார்த்த ரசிகர்கள் மனதில் அரங்கேற்றும் மாணவியின் நடனத்தைப் பார்ப்பது போலல்லாது அநுபவம் பெற்ற ஒரு நடனமணியின் பூரண நிகழ்ச்சியினைப் பார்ப்பது போன்ற உணர்வே ஏற்பட்டிருக்கும். இவ்வாறான ஒரு நிகழ்வில் அவரை நெறிப்படுத்தி, பயிற்றுவித்து நிகழ்ச்சியினை நல்லதோர் ஆரமாகத் தொடுத்த குரு திருமதி மாலா சத்தியமூர்த்தியின் ஆற்றலை நடன ஆர்வலர்கள் இனம் கண்டு கொண்டிருப்பர்.

அரங்கேற்றம் முறைப்படி நிகழுமுன்பே மாணவிகள் மேடையேறலாமா என்ற கேள்வி பரதநாட்டிய ஆர்வலர்கள் மத்தியில் விவாதிக்கப்படுவதுண்டு. விதிகளில் அவ்வாறான ஏற்பாடு இல்லாவிடினும், மாணவிகளுக்கு ஊக்கமும் மேடைத்துணிவும் ஏற்படுத்துவதற்காக, சமீப காலங்களில் ஆசிரியர்கள் மாணவிகளுக்கு சந்தர்ப்பம் அளித்து வருவது நாம் யாவரும் அறிந்ததே.

அரங்கேற்றமாயினும் பூரணமான ஒரு பரதநாட்டியக் கச்சேரியாயினும், இறைவணக்கத்துடன் ஆரம்பித்து, அலாரிப்பில் மெல்ல மலர்ந்து, ஜதீஸ்வரத்தில் ஜதிகளுக்கும் ஸ்வரக்கோர்வைகளுக்கும் ஏற்ப ஆடி, சப்தத்தில் ஓரளவு அபிநயங் களும் இணைய, வர்ணத்திலும், பதத்திலும் ஸஞ்சாரி பாவம் எனப்படும் விவரண மான அபிநயத்திற்கும் பாவத்திற்கும் ஏதுவாக கற்பனாவளத்துடன் விஸ்தாரம் செய்து,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லானாவில் துரிதகதியுடனான பாத அடவுகளுடன் உச்சநிலையடைந்து மங்களத்துடன் இனிதே நிறைவேறுவது வழமை.

அன்று யாழினியின் அலாரிப்பின் போதே நாட்டை ராகத்தில் ஆரம்பித்த பாடலுடன் கணேச கௌத்துவமும் சேர்ந்து கொள்ள, அலாரிப்பிலேயே நிகழ்ச்சி களை கட்டத் தொடங்கிவிட்டது. தொந்திக் கணபதியின் நர்த்தனத்தை கோடி காட்டி, ஐதீஸ்வரத்தில் பாத அடவுகள் கோர்வையாக, சப்தத்தில் மிஸ்ர நடையில் ஆடிய ததன தந்தன என்ற உருப்படியில் ஆயர்சேரியை மேடையில் ரசிகர்கள் கண்முன்னே யாழினி கொண்டு வந்து காட்டினார். கெஞ்சுகின்ற ஆயர்சிறார்களையும் வெண்ணெய் கலயத்துடன் மாயம் செய்த கண்ணனையும், யமுனாதிரத்தையும் கணத்துக் கணம் காட்டி இந்த மாயமெல்லாம் செய்தவர் வேறு யாருமல்ல அநந்த பத்மநாப ஸ்வாமிதான் என்ற உருப்படி முடிவுபெற கீர்த்தனையில் ஆடல் வல்லானின் தாண்டவம் நன்கு ஆடப்பட்டாலும், சஞ்சாரிபாவம் நன்கு விஸ்தாரப் படுத்தக் கூடிய உருப்படி சுருக்கமாக முடிக்கப்பட்டது.

பதத்தில் “கிருஷ்ணா நீ வேகமாய் வரமாட்டாயா” என்ற அர்த்தமுடைய கன்னடமொழி உருப்படியில் கெஞ்சுகின்ற யசோதையையும், விஞ்சுகின்ற பாலகோபால னையும் ரசிகர்கள் கண்டு களித்தனர்.

மயில் நடனம் பாமரநடனவகையில் ஒன்றான போதும் கூட, பொருத்தமான ஒலி, ஒளியமைப்புடன் மிகவும் சிறப்பாகவே அமைந்துவிட்டது. தோகையுடைய ஆண்மயிலை ஏன் பெண்களுக்குவமையாக்குதல் வேண்டும் என்ற ஐயம் யாருக்காவது இருந்திருக்குமாயின் யாழினியின் நளினமான லாகவமான பாவ அசைவுகளை கண்ட போது இல்லாது போயிருக்கும்.

வர்ணத்திலும் அஷ்டபதியிலும் நாயக-நாயகி பாவமும், நாயகன் மேல் நாயகி கொண்ட விரகமும் நாயகி விரகம் தவிர்க்க மேற்கொள்ளும் முயற்சிகளும் பல்வேறு வகைகளிலும் எடுத்துக் காட்டப்பட்டன.

எந்த ஒரு நடன உருப்படியிலும் பரப்பிரம்மத்தை, முழுமுதலாகவோ, குழந் தையாகவோ, தோழனாகவோ நாயகனாகவோ பாவித்து ஏங்கிய ஒரு பெண்ணையும், மயில் நடனத்தில் கூட, பஞ்சபூதங்களில் ஒன்றான மழையைக் காண ஏங்கிப் பின் களித்த மயிலை மேலோட்டமாக கண்ட ரசிகர்கள், ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் பார்த்திருப்பாராயின் பரமாத்மாவுடன் ஒன்றிவிடத் துடிக்கும் ஜீவாத்மாவின் ஏக்கத்தை யும், அவ்வாறு இணையும் போது ஏற்படக்கூடிய பரிபூரணானந்தக் களிப்பை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இழையோட்டமாக நிகழ்ச்சி காட்டியதை அவதானித்திருப்பர். அரங்கத்தையும், ஆடும் பெண்ணையும் வணக்கத்துக்குரிய ஆலயமே ஆக்கிவிடும் உன்னதமான ஒரு கலைவடிவத்தை புலம் பெயர்ந்த நாட்டில் அறிமுகம் செய்யும் போது, நம்மவர்களில் சிலர் காலணிகளுடன் மேடையேறியது கவலைக் குரியதாகிவிடுகிறது. பரதசாஸ்திரத்தில் ஆடுபவருக்கு முக்கியமளிக்கும் முகமாகவும், பாவத்தினாலேயே சகலமும் வெளிப்படுத்தும் கலையாயாலும் மேடையலங்காரம் அவதானமாகச் செய்யப்பட வேண்டிய விவரணங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரையறுக்கப்படு கின்றன. அன்று மேடையில் தொங்கிய பளபளப்பான ஜிகினா அலங்காரமும், எழுத் துக்களைக் கொண்ட பெரிதான துணித்தொங்கலும் தவிர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நடன நிகழ்ச்சிக்கு ஒளியமைப்பு மிகமுக்கியமானதொன்றாகும். எப்போது, எங்கெங்கு ஒளிக்கற்றைகள் பொருத்தமாக வீசப்படுதல் பற்றிய தெளிவு நிகழ்ச்சி யின் சிறப்புக்குக் காரணியாகிவிடுவதுண்டு. தொடர்ந்து வீசப்படும் வீடியோ படப் பிடிப்பாளர்களின் பிரகாசமான ஒளிக்கற்றைகள், ஒளியமைப்பு முழுவதையும் பாழடித்துவிடுவதுண்டு. கலை நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாது, புலம்பெயர் மக்களின் எந்தவொரு விழாக்களிலும் வீடியோ படப்பிடிப்பாளர்களின் ஆக்கிரமிப்பும், சில சமயங்களில் அவர்களே விழாக்களின் போக்கினைத் தீர்மானிப்பவர்களாகவும் ஆகிவிடும் ஓர் சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது.

நிகழ்ச்சியின் போது வழங்கப்பட்ட பின்னனி இசை மிகச்சிறப்பாகவே அமைந்திருந்ததை யாரும் மறுக்க முடியாது. டென்மார்க் நாட்டிலும் பரவலாக ஆற்றல் வாய்ந்த இசைக் கலைஞர்கள் இருக்கின்றார்கள் என்பதனையும், தேவைக் கேற்ப அவர்களை ஒருங்கிணைத்து நாம் பயன் பெறலாம் என்பதனையும் எதிர் காலத்தில் இவ்வாறான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வோர் கவனத்தில் கொள்ளு தல் வேண்டும். பாடப்பட்ட பாடல்களில் ததன தந்தன, கிருஷ்ணா நீ பேகனே, அஷ்டபதி ஆகிய உருப்படிகள் தெலுங்கிலும், கன்னட மொழியிலும் அமைந்தவை. ததன தந்தன, கிருஷ்ணா நீ பேகனே ஆகிய பாடல்கள் முறையே "ஆயர்சேரியர்", "கிருஷ்ணா நீ வேகமாய் வாராய்" என ராக, தாளம் பிசகாது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டவை. அஷ்டபதி கவிஞர் கண்ணதாசனினால் அதே ராக தாளத்திற் கமையாவிடினும் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது. நிகழ்ச்சியினை அளிப்ப வர்கள் கூடியவரை தமிழ்ப்பாடலகளைப் பாடுவதுடன், ஜெயதேவரின் "அஷ்டபதி" போன்ற வடமொழி ஸ்லோகங்களில் உள்ள ரசமும் சந்தமும் வெளிப்பட மொழிபெயர்க்கப் படுதல் சிரமமாயினும் ரசிகர்களுக்கு கூடியவரை விளக்கத்தினையும் நிகழ்ச்சி நிரலுடன் வெளியிடுவாராயின் சுவை அதிகமாகிவிட வாய்ப்புண்டு. அல்லாவிடின் பாவமுள்ள நிகழ்ச்சிகள் பத்தோடு பதினொன்று எனக் கணக்கில் சேர்வது துரதிஷ்ட வசமானதே.

அன்று திருஷ்டி பொட்டுப் போல ஒரு சில குறைகளிருந்தபோதும் பொது வாக அரங்கேற்றம் மிகவும் சிறப்பாகவே நிறைவேறியது. யாழினியின் பாவ, அங்க சுத்தத்துடனான நடனத்தில், அவரது குரு திருமதி மாலா சத்தியமூர்த்தியின் நெறி யாள்கையையும் ஆற்றலையும் கண்டு களித்தோம். அரங்கேற்றும் மாணவி ஆசிரியையின் வழிநடத்தலில் பாடாந்தரமாக ஆசிரியை சொல்லிக் கொடுத்ததையே ஆடுவது இயல்பு. இனிவரும் நிகழ்ச்சிகளில் மாணவியின் கற்பனாவளம் வெளிப் படுவதன் மூலமே அவர் மேலும் வளர முடியும். கற்பனாவளமும், சஞ்சாரி பாவமும் நன்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபிவிருத்தியடைய தமிழ், இந்து இலக்கிய அறிவும், புராண இதிகாச நிகழ்வுகளின் நுணுக்கமான விவரங்களையும் அறிந்திருத்தல் அவசியம். இளம் பராயத்திலேயே புலம் பெயர்ந்து அந்நிய மொழியில் கல்விபயிலும் சூழ்நிலையில், மேற்கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக வாசித்து தனது அறிவினை விருத்தி செய்வார் என நம்புவோம்.

இறுதியாக கலைநிகழ்ச்சிகளில் புரட்சி செய்கின்றோம் என நடனமணிகள், பல்வேறு புது முயற்சிகளிலும் இப்போது ஈடுபடுவதுண்டு. அது தனியொருவர் எவருக்குமுள்ள சுதந்திரம். பல்லாயிரம் வருடங்களாகப் பேணப்பட்ட ஒரு கலை வடிவத்தின் அடையாளம் மாறிப் போகாது தாம் அளிக்கும் நிகழ்ச்சிகளில் தாம் கற்ற கலையின் அடிப்படையில் தாம் செய்யும் முயற்சிகளுக்கு தாமே பொறுப்பாளி கள் என முன்னுரை வழங்குவதன் மூலம் ரசிகர்கள், ஆர்வலர்கள் மனதில் ஏற்படும் குழப்பங்கள் தவிர்க்கப்படலாம். புலம் பெயர்ந்த கலைஞர்கள் இதனைக் கவனத்தில் கொள்வது மிகமிக அவசியம்.

# வாசகர்கள் கவனத்திற்கு !

**சஞ்சீவி அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் உங்கள் கடிதங்கள், ஆக்கங்கள் போன்ற சகல சஞ்சீவியின் தொடர்புகளுக்கும் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

**CHANCHIVE**
**NY GADE 22**
**7500 HOLSTEBRO**
**DENMARK.**

www.tamilarangam.net

சிறுகதை...........................................................................................

# றீனாவுக்கு என்ன ?

– வேதா.இலங்காதிலகம். -

மிக அமைதியாகவும் சுவாரஸ்யமாகவும் எனது "டிசைன் ஸ்கூல்" படிப்பு போய் கொண்டிருந்தது. அப்போ தான் அந்தப் பெரிய நிறுவனத்தின் டிசைன் பகுதியில் எனது 3மாத பயிற்சியை முடித்து நல்ல புள்ளிகளுடன் 3வது வருட மாணவியாக காலடி எடுத்து வைத்தேன். மிக ஆவலுடன் வீடு வந்தேன் இதைக் கூறி மகிழ. ஆனால் இங்கு எனது கணவருக்கு யூலண்டுக்கு வேலை மாற்றல் எனும் தகவல் காத்திருந்தது.

" நான் யூலண்டில் போய் வேலை செய்கிறேன் நீர் இங்கேயே இருந்து படிப்பை முடியும். கொப்பன்கேகன் தலைநகராதலால் பின்னால் வேலை வாய்ப்புக் கள் உண்டு " என்றார் என் கணவர்.
குடும்பம் பிரிந்து வாழ்வது எனக்குப் பிடிக்காத ஒன்று. நான் நேரடியாக யூலண்ட் டிசைன் ஸ்கூலுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விடயத்தை நன்கு விளக்கிக் கூறினேன். ஒரு கிழமை கழித்து பதில் தருவதாக கூறிய பின்னர், எனக்கு மூன்றாவது வருடத்தில் இடமும் தந்தனர்.

ஒரு மாதம் முடியவே கணவர் வேலையை ஏற்க வேண்டும். யூலண்டில் நாமும் அமைதியாக இடம் மாறினோம். பாடசாலைக்கு முதலில் விஜயம் செய்த போது ஸ்ரெலா என்ற கிறீஸ்த்தவ இலங்கைப் பெண்மணியும் எனது வகுப்பில் உள்ளாள் என அறிந்தேன். அவளுடன் தனிய கதைக்கக் கிடைத்த போது வகுப்பு, படிப்பு நிலைமை, மாணவர்கள், பரீட்சைகள் என்பன பற்றி விவாக கூறினாள்.
வகுப்பில் றீனா என்பவள் மிகவும் கர்வம் படித்தவள், அத்துடன் துடுக்கும் வாயாடியும் கூட. தான் தான் வகுப்பில் தலைவி, தன்னை வட திறமை சாலி இல்லை - யாரும் இருக்கவும் கூடாது என எண்ணுபவள். அவளுடன் கவனமாக நடக்க வேண்டும் எனவும் கூறினாள். சொன்ன தகவல்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் நன்றி கூறினேன். யாரும் சொல்லி ஒருவரை நாம் எடை போடக் கூடாது நாமே அனுபவித்து அறிய வேண்டும் எனும் கொள்கை கொண்டவள் நான். இப்படியான குணநலன்களை எமது நாட்டு மக்களிடமே நாம் அறிவதுண்டு. ஸ்ரெலா கூறியது புதுமையாக இருந்தது, ஆயினும் இப்படியும் மக்கள் இருக்கலாம்.

கடந்த மாதம் தான் எனது அயல்வீட்டு பெண்மணி சலோட்டாவுடன் ஒரு அனுபவம் கிடைத்தது. அவள் ஒரு பார்டிக்குப் போய் வந்தாள். பார்டிக்கு தானாக ஒரு கவுண் தைத்து அதைப்போடப் போவதாகக் கூறினாள். நானும் அடுத்தநாள் "எப்படிப் போனது பார்ட்டி" என்று கேட்டு விட்டேன். அடேயப்பா! என்னமாய் அலுத்துக் கொண்டாள். தனது கவுணைப் போல இன்னொருத்தியும் போட்டு வந்திட்டாளாம். தனது பார்ட்டி உற்சாகமே போய்விட்ட தாம். மிகவும் அலுப்பாக போர் அடித்தது பார்ட்டி என்றாள். தன்னைப் போல மற்றவர்கள் உடுப்பு போடக் கூடாது என்றே அவள் தானாக தைத்துப் போடுவாளாம். நான் சிரித்தேன். இப்படி ஒரு நாட்டில் மிக நீண்ட காலம் இருக்க இருக்கவே பல சுவையான அனுபவங்களை அறியமுடிகிறது. நிறம் மட்டுமே மாற்றம். குணமெல்லாம் உலகெங்கணும் ஒன்றே என்பது எவ்வளவு உண்மை.

வகுப்புக்கள் தொடங்கின, நான் ரீனாவுடனும் அன்புடன் பழகினேன். ஒவ்வொரு அடியும் பத்திரமாகவே எடுத்து வைத்தேன்- நிதானத்துடன். ' பற்றிக்' தான் மாணவர் தலைவன். ஆயினும் ரீனாவின் கை ஓங்கியே நின்றது. தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் ரீனா மூக்கை நீட்டுவது எனக்குப் பிடிக்கவேயில்லை. அவள் பெண் ஆக இல்லை. ஒரு ஆண் ஆகவே நின்றாள். இந்த விடயத்தில் இங்கு தாராள இடம் உண்டு தானே, வியப்பதற்கும் இல்லை. தான் சொல்பவைகளின் அர்த்தம் அறிந்து தான் கூறுகிறாளா. அல்லது வாயில் வருவது எதையும் கூறலாம் என்று நினைக்கிறாளா. தான் தான் திறமைசாலி என்ற கர்வத்தில் இப்படிக் கதைப்பாளா. ஏன் இவளுக்கு இப்படி தலைக்கனம்? என பலவாறாக நான் எண்ணுவதுண்டு.

அரை வருடப்படிப்பில் எமது திறமைகள் அள வெடுக்கப்பட்டன. ஒவ்வொருவரின் டிசைன் களும் கண் காட்சிக்குப் பாடசாலையில் வைக்கப்பட்டு சிறந்த டிசைனர் என புள்ளிகள் எனக்குத் தரப்பட்டன. ஏற்கனவே ரீனாவின் அணுகுமுறைகள் எனக்கு அதிருப்தியைத் தந்தாலும் நான் எதையும் வெளிக்காட்டாமல் சாதாரணமாகவே பழகினேன். இப்போ ரீனா வலிய என்னோடு வாதாடப் புறப்படுவது தெரிந்தது. ஆயினும் நான் ஒதுங்கி 'ஊக்கமது கைவிடேல்' என படிப்பில் கவனமாகவே இருந்தேன். அவள் உலையில் கொதிக்கும் நீர் போலவே இருந்தாள், பொறாமையினால்.

குழுக்களாக வேலை செய்யும் போது அவளது வாய்க்குப் பயந்து எல்லோரும் அவளுக்கு தாளம் போடுவது தெரிந்தது. கூஜாத்தூக்கிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போல.
நான் எதையும் பொருட்படுத்தவில்லை. நாமென்ன எந்த நாட்டைப் பிடிக்கலாமென்று டென்மார்க்கில் அரசியலா நடத்த வந்தோம், இந்நாட்டு மக்களுடன் சண்டை பிடிக்கவா வந்தோம். அமைதியாக வாழவல்லவா வந்தோமென்று, கூடியளவு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என இருந்தேன்.

4வது வருடம் முடியும் போது எப்போதும் 'அடிபட்ட நாய் போல குரைக்கும்' இவளது தொல்லையை தாங்க முடியாது என உணர்ந்தேன். ஏன் யூலண்டிற்கு மாறி வந்தேன் என உணர தலைப்பட்டேன். இனியும் தொல்லையை வளர்ப்பது கூடாது. கிள்ள வேண்டும் என முடிவெடுத்து மாணவர் தலைவர் முதலியோர்களுடன் கலந்துரையாடினேன். பலர் பல விதமான யோசனைகளைக் கூறினாலும் எனது கேள்வி என்பது, ஏன் ரீனா இப்படி நடக்கிறாள்? அவளுக்கு என்ன பிரச்சனை? என்பதே.

அவள் பற்றிய தகவல்களைச் சேகரித்தேன். அவளது தாயார் யூலண்டில் பிரபல இதய சிகிச்சை நிபுணராம். அந்த பெரிய மனிதப் பண்பை இவளிடம் காணமே. இவள் நிஜ இதயத்தையல்லவா அறுக்கிறாள். எனது திட்டப்படி சில புத்தகங்களை கடனாகப் பெற அவள் வீட்டிற்குப் போனேன்.

வாசல் அழைப்பு மணியை அழுத்திய போது கதவுக் கண்ணாடித்திரை விலகி ஒரு அழகு முகம் கழுத்தளவு தெரிந்தது. நான் அசந்துவிட்டேன். மன்மதனோ என எண்ணும் அழகு. ஓகோ! இப்படியொரு அழகான கணவன் இருக்கிறார் என்ற கர்வமோ இவளுக்கு? சுமார் 10வயதுடைய ஒரு மகன் வந்து கதவைத்திறந்து உள்ளே அழைத்தான்.

" அம்மா உங்களை இருக்கச் சொன்னவ, 5 நிமிடத்தில் வருவா."

" இதைப் பாருங்கள்...." ஒரு புத்தகத்தை நீட்டியது குழந்தை. என்னிட மிருந்து ஏதோ நழுவுவது போல இருந்தது. அப்பையனின் கரத்தில் மூன்று விரல்களும் மறு கரத்தில் ஆறு விரல்களும் இருந்தது.

சோபாவில் அமர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். அலுமாரி நிறைய அரபு, டெனிஸ் எழுத்துக்களாக பல புத்தகங்கள் இருந்தன.

ரீனா வந்தாள். வகுப்பில் கண்ட ரீனாவாக இல்லாது முற்றிலும் மாறுபட்ட ரீனா ஒருத்தியைக் கண்டேன்.
மிக வித்தியாசமாகக் கதைத்தாள், அமைதியுடன்.

" இதென்ன அரபு எழுத்துக்கள், நீ வாசிப்பாயா இவைகளை? " என்றேன் அலுமாரியினைக் காட்டி.

www.tamilarangam.net

" இது எனது கணவரது. அவர் அரபு நாட்டவர், இன்ஜினியர். ஒரு ஆக்ஸிடன்டில் கால்களின் சக்தியினை இழந்து சக்கரநாற்காலியில் 2வருடங்களாக வளைய வருகிறார் " என்றாள்.

" அடுத்தகிழமை நான் பாடசாலை வரமாட்டேன்- மகனின் விரல்களுக்கு அறுவை சிகிச்சை நடக்கவுள்ளது. நீ புத்தகங்களை வைத்திரு நான் பின்னர் எடுக்கிறேன் " என்றாள்.

அவள் சொன்னது யாவும் எனக்கு கனவிலே கேட்பது போல இருந்தது. சரி... என்று கூறியபடி வீடு வந்து சேர்ந்தேன். எப்படி காரை ஓட்டினேன், எப்படி வந்தேனென்று தெரியவில்லை. இப்படி ஒரு நிலைமை யாருக்குமே வரக்கூடாது. இப்போது எனக்கு எல்லாமே விளங்கியது. அவளுக்கு வீட்டில் தலைநிறைய குழப்பம்- குடும்பக் குழப்பம்- கலாசச்சாரக் குழப்பம், அவளது படிப்பு வேறு, கூடுதலான சுமைகள். அவள் மேல் பரிதாபமாக இருந்தது. அவள் தான் பைத்திய மாகி மற்றவர்களையுமல்லவா பைத்தியமாக்குகின்றாள். வீட்டுப் பிரச்சனைகளை வேறு ரூபத்தில் பாடசாலைக்கு கொண்டு வருகிறாள். இது அவளுக்குப் புரிய வில்லை. எனக்கு இப்போது அவளது பிரச்சனைகள் விளங்குகின்றது. யாவற்றையும் அவளுக்கு விளக்கிக்கூறி தகுந்தவொரு மனோவியலாளரை போய் சந்திக்கும்படி கூற வேண்டும். தகுந்த ஆலோசனை பெறுவாளாயின் அவள் மனிதத் தன்மையுடன் நடக்க முடியும்.

முற்றும்.

---

## சஞ்சீவி வாசகர்கட்கு !
## எமது அன்பான

# நத்தார், புது வருட வாழ்த்துக்கள்

www.tamilarangam.net

# ஓர் செய்தி

கொடிய
இருளைக் கிழித்து வரும்
சிறிய ஒளிக்கீற்றே !
ஓர் அழகிய கனவாய்
வாழ்வதற்கான நம்பிக்கையுடன்
இக் கணத்தில்
ஜனனித்திருக்கும் சிசுவே !

உன் வாழ்வு இனம், மதம், பால்
அடிப்படையின் கீழ்
இக் கணத்தில் இருந்து
நிர்ணயிக்கப்படும்
உன் காலங்கள்
அகதி முகாம்களிலோ
ஆயுதங்களுடன் பயிற்சி முகாம்களிலோ

இப்போதெல்லாம்
நாட்கள் புதுசுபுதுசாய்ப் பூப்பதில்லை
பனிப்புல் அருகே காளான்கள் முளைப்பதில்லை
நாங்கள் வாழ்வதற்கான அர்த்தத்தை
தொலைத்து பல நாட்கள்
எங்களிடம் பகிர்ந்து கொள்ள நம்பிக்கைகளோ
வசந்தங்களோ இல்லை

நீ உறங்கிக் கொண்டிருக்கும்
இப்பரப்பில்
எக்கணமும் குண்டுகள் வீசப்படலாம்
என்பதே
இப்போதெல்லாம் உண்மை !

- பாமதி
(கனடா)

www.tamilarangam.net

# நிகழ்வுகள்...

## உளவியலாளர் திரு சிறிகதிர்காமநாதனுடன் ஓர் சந்திப்பு !



1990ம் ஆண்டலிருந்து இன்று வரையும் எம்மவர்கள் மத்தியிலும், டெனிஷ் மக்கள் மத்தியிலும் உளவியலாளராகக் கடமை புரிந்து வரும் திரு சிறிகதிர்காமநாதனுடன் கலந்துரையாடும் வாய்ப்பு எமக்கு அண்மையில் கிட்டியது. அவரோடு கதைத்துக் கொண்டவற்றில் சில விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சஞ்: இன்றைய புலம்பெயர் சமூகத்தில் தமிழர் குடும்ப வாழ்வில் நிறையப்பிரச்சினைகளை நாளுக்கு நாள் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம், கேள்விப்படுகின்றோம் இது பற்றிய உங்கள் பொதுவான கருத்தென்ன...?

கதிர் : எங்கள் வாழ்க்கை முறையே ஒரு கூட்டுக்குடும்ப வாழ்க்கை, அதாவது இரத்த உறவுகளோடு ஒன்றாய் சேர்ந்து வாழ்ந்து வருவதாகும். சொந்தம் பந்தம் என்ற நிலையில் இயங்கிய ஒரு விரிந்த குடும்ப முறையில் இரத்த உருத்துக்களோடு வாழ்ந்த எமது சமூகம் எது விதத் தாயாரிப்புக்களும் இல்லாது உள்நாட்டு சமூக அரசியல் நெருக்கடிகளால் இங்கு வந்து தாறுமாறாக குழம்பிநிற்கிறது.

எங்கள் நாட்டில் இருக்கும் காலங்களில் ஒரு திருமணம் செய்வதாக இருந்தால் கூட ஒரு பெண்ணுக்கோ ஆணுக்கோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனேகமாக ஏற்கனவே தெரிந்த ஒரு மச்சானையோ மச்சாளையோ அல்லது வேறு பரீட்சையமானவர்களையோ நிட்சயம் செய்து விடுவதால் அவர்கள் மனதில் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னரே ஒவ்வொருவர் மீதான அன்பும் மரியாதையும், விளக்கமும் வளர்ந்து விடுகின்றது. திருமணம் முடிந்த பின்னர் இவர்கள் வாழ்வில் நல்ல பெறுபேறுகளே கிடைக்கின்றது எனலாம்.

ஆனால் இங்கே இது எதிர்மாறாக உள்ளது. இங்கே வாழும் இளைஞர்கள் தங்களுடன் பழகிய இளைஞர்களை தங்கள் சகோதரிகளுக்கோ அல்லது தமக்குத் தெரிந்த உறவினர்களுக்கோ திருமணத்தைப் பேசி முடித்து வைக்கிறார்கள். இந்த அகதி நிலையில் தங்கள் நட்புக்கள் நிலையானதென நினைத்துக் கொண்டே தமது அடுத்த சந்ததியினருக்கும் திருமணத்தைச் செய்து வைக்கின்றார்கள்.

ஏற்கனவே ஒன்றுமே தெரியாத ஒரு அறிமுகமும் இல்லாத பெண் பல கற்பனைகளோடும் அபிலாசைகளோடும் இங்கு வந்து இறங்கியவுடன் கணவனுக்கு இருக்கும் பொருளாதார நெருக்கடிகளினால் கஷ்ரப்படும் வேளையில் கடன்காரனும் வட்டிக்காரனும் வீடு தேடி வரும் போது அவள் மேலும் நொந்து போவதோடு தானும் ஏதோ வேலையைச் செய்ய வேண்டும் என நினைத்துக் கொண்டு வேலைக்குப் போகின்றாள். இப்படியான சிக்கல்கள் குடும்பத்தில் குழப்பங்களை இலகுவாக ஏற்படுத்தி விடுகின்றது.

சஞ்: ஊரிலும் ஏற்கனவே அறிமுகமில்லாத ஒருவரை மாப்பிள்ளை பேசித் திருமணம் செய்தும் சந்தோசமாய் இருக்கின்றார்கள் தானே. இது பற்றி என்ன சொல்கின்றீர்கள்....?

கதிர்: அங்கே சமூகரீதியான கட்டுப்பாடுகளோடு சமூக குடும்ப உறவினர்களின் ஒத்துழைப்புக்களும் விளக்கங்களோடு நிறைந்த வலைப்பின்னல் இருப்பதால் பிரச்சினைகளுக்கோ குழப்பக்கங் களுக்கோ இடம் வருவது மிகக் குறைவு. ஆனால் ஏதாவது சிறு பிரச்சினைகள் தோன்றினால் கூட அவை இலகுவில் மறைந்து விடுகின்றன. ஆனால் இங்கே குடும்பத்தைக் குலைத்துவிடுவதற்கான வசதிகளே மலிவானதாகவும் இலகுவானதாகவும் இருக்கின்றது.

சஞ்: ஏற்கனவே திருமணம் செய்து குழந்தை குட்டிகளுடன் வாழ்ந்தவர்கள் கூட இங்கே வந்தவுடன் பல பிரச்சிசைகளைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்திக்கின்றார்கள் இது பற்றி.....?

கதிர்: எமது நாட்டில் ஆண்தான் உழைப்பவன், பெண்ணை, குடும்பத்தை பராமரிப்பதற்குரிய வருமானம் கொண்டவன், ஆனால் இங்கே சும்மா இருக்க எல்லோருக்கும் வருமானம் வருகின்றது. இதனால் ஆணுக்கு இருந்த அந்தஸ்த்து குறைந்து விடுகின்றது. இங்கே ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்படுகின்றது.

எங்கள் நாட்டில் ஒரு பெண்ணானவள் சமைத்து விட்டு முதலில் ஒரு பெரிய மீன் துண்டையோ அல்லது முட்டையையோ முதலில் கணவனுக்கே பரிமாறிவிட்டு அடுத்ததாகக் குழந்தைகளுக்கு பரிமாறுகின்றாள், கடைசியில் தான் அவள் சாப்பிடுகின்றாள், ஏன் என்றால் உடம்பை முறித்து வேலை செய்து விட்டு வருபவன் எங்கள் முன்னேற்றத்துக்கு பொறுப்பானவன் குடும்பத்துக்குத் தலைவன் என்று இயற்கையாகவே நினைத்துக் கொள்ளுகின்றாள். ஆனால் இங்கே சும்மா சோபாவுக்குள் கிடந்து என்ன கிழிக்கின்றாய் என்று கணவனைப்பார்த்துக் கேட்கின்றார்கள்.

எங்களுடைய சமூகத்தில் ஆண் பெண் என்ற வகையில் குடும்பக்கடமைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இங்கே ஆண் பெண் என்ற இயல்பு இருவருக்கும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இடம் சூழலுக்குத் தக்கமாதிரி மாறி நடக்க வேண்டுமேயொழிய ஊரில் இப்படித்தான் வாழ்ந்தனாங்கள், இது தான் எங்கள் கலாச்சாரம் என்று தமக்குத் தெரிந்த மாதிரி விளக்கங்கள் கொடுக்காது, இந்தச் சூழலில் என்ன தேவை என்பதை முக்கியமாக உணர்ந்து என் பங்களிப்பு எப்படியிருக்க வேண்டும் எனச்செயற்படுதல் எல்லோருக் கும் நல்லதே.

சஞ்: புதிதாக திருமணம் செய்தோரின் மனக் குழப்பங்கள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

கதிர்: தமிழ்க்கலாச்சார பிள்ளை வளர்ப்பு முறையில் தாய்மார்கள் தங்கள் ஆண்பிள்ளைகளை அன்பாகவும், ஆதரவாகவும் கண்டியாம லும் அளவுக்கு மிஞ்சி செல்லம் கொடுத்து வளர்ப்பது இயற்கையாக இருக்கின்றது. இப்பண்புகள் ஒவ்வொருவருடைய ஆழ்மனதிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிந்து இருக்கின்றது. இதனால் பல ஆண்கள் தம்மை அறியாமலேயே தமது மனைவிமாரிடமிருந்து, தமது தாய்மார் தனக்கு பிள்ளைப் பராயத்தில் செய்த விடயங்களை தமக்குச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

பெண்பிள்ளைகள் தமது தந்தையரிடமிருந்து பெற்ற ஆதரவு, அரவணைப்பு, உதவி, செல்லம், பாசம் போன்றவற்றை தமது கணவனிடம் எதிர்பார்க்கின்றார்கள். அந்த எதிர்பார்ப்புக்கள் குழம்பும் பட்சத்தில் அவர்கள் மனம் உடைந்து போகின்றார்கள்.

எமது சமூக அமைப்பில் ஒரு பிள்ளையை பார்த்து தாயைப் போல் இருக்கின்றார் தந்தையைப் போல் இருக்கின்றார் என்பது வெறும் கதையளவில் மாத்திரம் இருக்கின்றதே தவிர நிகழ்கால வாழ்க்கையை எப்படிப் பாதிக்கின்றது என்பதையும் எவ்வளவு முக்கியத்துவம் வகிக்கின்றது என்பது பற்றியும் ஒருவரும் அக்கறை கொள்வதில்லை. இந்த விடயம் பற்றி குடும்பமாகச் சேர்ந்து கடுமையாகச் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகளும் அது சம்பந்தமான கருத்துப் பரிமாற்றங்களுமே நல்ல பரிகாரமாய் அமையும். இதே மாதிரியான சிந்தனைகளை பிள்ளைகளுக்கும் பாவிக்கலாம். அதாவது நாங்கள் குழந்தையாய் இருந்த போது எப்படி இருந்தோம் என்று நினைத்துக் கதைத்தால் குழந்தைகளும் தமிழ்த் தன்மையோடு வாழலாம்.

பிள்ளைகளுடன் கதைக்கும் போது குழந்தைகளின் வயதை மனதில் வைத்துக் கொண்டு கதைக்க வேண்டும். பிள்ளைகளுக்கேற்ற வகையில் வித்தியாசப்படுத்திக் கதைத்துக் கொள்ள வேண்டும். தாய்மார்கள் பெண்பிள்ளைகளுடன் பல பிரச்சினைகளை மனம் விட்டுக் கதைக்க வேண்டும். அதே போல் தந்தைமாரும் ஆண் பிள்ளைகளுடன் கதைக்க வேண்டும். பொதுவிடயங்களை எல்லோரும் சேர்ந்திருந்து கதைக்க வேண்டும். பிள்ளைகளின் வாழ்க்கைக்குத் தேவையான நுட்பங்களை தமது வழிகாட்டலின் கீழ் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

சஞ்: “பிரச்சினை” என்ற சொல் இன்று எல்லோரினாலும் அதிகமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. இது பற்றி...........?

கதி: “பிரச்சினை” என்ற சொல் மனம் போன போக்கில் ஒவ்வொருவரா லும் சரியான காரணமின்றி பாவிக்கப்படுகின்ற சொற்களில் இதுவும் ஒன்று. அதன் உண்மையான அர்த்தங்கள் பல்வேறு வகைப்படும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதில் முக்கியமானது தங்களுடைய இயலாமை, விளக்கமின்மை, ஒரு விடயத்தை புரிந்து கொள்ளும் ஆர்வமில்லாத் தன்மை, விடயங்களை கண்டு பிடிப்பதில் உற்சாகமின்மை போதிய கடந்த கால அனுபவங்கள் இல்லாத் தன்மை, மனம் விட்டு மற்றவருடன் வெளிப்படையாகக் கதைக்கும் பண்பு குறைந்த நிலை, அந்நியச் சூழலில் புதுவிதமான எதிர்பார்ப்புக்களை விளங்கி செயற்பட முடியாமை, ஊரிலுள்ள நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்ட மனோநிலை போன்றனவும் மற்றும் இன்னோரன்ன குடும்ப நிர்வாகத்தினை சரிவர நிர்வகிக்க முடியாத நிலை போன்ற விடயங்களை வெளிப்படுத்த "பிரச்சினை " என்ற பதம் பாவிக்கப்படுகின்றது. இன்னோர் விதமாகச் சொல்லும் போது "பிரச்சினை" என்ற கவசத்தினுள் எரிமலைக் குழம்பு போன்ற குமுறும் விடயங்கள் அடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆண் பெண் வித்தியாசம் இல்லாது "பிரச்சினை" என்ற சொல் பல்வேறுபட்ட காரசாரமான அர்த்தங்களுடன் ஒவ்வொருவர் மனதிலும் தோற்றம் பெற்று வாயால் புறப்படும் போது உப்புச்சப்பற்ற ஒரு சாதரண சொல்லாக பயன்படுத்தப்படுவதை அவதானிக்கின்றோம். இதனால் "பிரச்சினை" என்று சொல் பலரின் சக்திகளையும் நேரங்களையும் மனவேதனைகளையும் மிச்சப்படுத்துகின்றது. அதாவது மனம் திறந்து உண்மையான பிரச்சினையின் வடிவங்களை தேவையில்லாது பலர் முன்னிலையில் வெளிப்படுத்தாது பூடகமாக தனது நிலையை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துகின்ற ஒரு கருத்துப் பரிமாற்ற வடிவமாக அமைந்துள்ளது.

இங்கு "பிரச்சினை" என்ற சொல் உள்ளடக்குகின்ற பல விடயங்கள் எமது ஊரில் சமூகமாக வாழ்ந்த காலத்தில் ஒருவரது பெற்றோர், சகோதரங்கள், அயலவர், நண்பர், தெரிந்தவர் போன்ற பலரினால் இணைந்து கையாளப்பட்டது. அந்தச் சமூகவலைப் பின்னல் இன்னும் புலம்பெயர்ந்த புகலிடச் சமூகத்தில் தெளிவாக உருவாகாத நிலையையும் "பிரச்சினை" என்ற சொல்லின் அதீத பிரயோகம் உள்ளடக்கி நிற்கின்றது எனலாம்.

முற்றும்.

---

1990 ம் ஆண்டிலிருந்து எம்மவர் மத்தியிலும், டெனிஸ் மக்கள் மத்தியிலும் உளவியலாளராகக் கடமையாற்றிவரும் திரு. சிறி கதிர்காமநாதன் அவர்களை 02.12.1996 முதல் டெனிஸ் சமூக நல அமைச்சு அங்கீகரிக்கப்பட்ட உளவியல் நிபுணருக்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கர்ப்பவதியும் கருவளர்ச்சியும்

- சத்யா.



ஒரு பெண் தாய்மைநிலை அல்லது தாயாவதற்கு கருத்தரித்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். வெளிநாடு களில் புலம்பெயர்ந்து வந்திருக்கும் அநேகமான பெண்களுக்கு தாயாகுதல் மகிழ்ச்சியாக இருந்தாலும் தாய்மை யுற்றிருக்கும் நாட்கள் பயம் கலந்த அனுபவமாகவே இருக்கின்றது. எங்கள் தாய்நாட்டில் ஏட்டில் எழுதப்படாத அனுபவம் முதிர்ந்த பாட்டிமார்களி னாலும் வயதில் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளினாலும் கர்ப்பவதிகள் திடப்படுத்தப்படுகின்றார்கள்.

கஸ்டமான குடும்பத்தில் இருக்கும் கர்ப்பமான பெண்களுக்குக் கூட இக்காலம் விசேட கவனிப்புக்கால மாகும். இப்பெண்ணின் தாய் உறவினர் கள் விசேடமாக விரும்பிய உணவு வகைகளை தயாரித்துக் கொடுப்பார் கள். இவர்கள் பயப்படாமலும் பிழை யானவற்றைச் செய்யாமலும் இருப்பதற் காக இவர்களுக்கு எல்லோரும் தைரி யத்தையும் பாதுகாப்பையும் வேண்டிய உதவிகளையும் மற்றவர்கள் செய்வார் கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இங்குள்ள பெண்களுக்கு இப்படியான வசதிகள் இல்லாததனால் இவர்களுக்கு தங்கள் பிரச்சினைகளை யாரிடம் சொல்வது என்ற எண்ணமும் மற்றவர்களிடம் சொல்வதற்கு வெட்கமும் பயமும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களின் மனம் ஒருபுறம் சந்தோசம் மறுபுறம் பயம்,வெட்கம். இவைகளினால் அலைமோதிக்கொண்டிருக்கின்றது. இருந்தாலும் வாழ்க்கையில் முதன்முதலாக பெறப்படும் எத்தனையோ அநுபவங்களில் முக்கியமாக கருதப்படுவது ஒரு பெண் முழுமையடைவதற்கு தன்னைத் தயார்படுத்தல் கருத்தரித்தல் என்னும் நிகழ்ச்சியாகும்.

முதலில் கருத்தரித்தல் என்றால் கணவனும் மனைவியும் தாமத்திய உறவில் ஈடுபடும் போது ஆணிடத்திலிருந்து வெளியேறும் ஜீவசத்தில் (விந்து) பல ஆயிரக்கணக்கான உயிரணுக்களில் ஏதேனும் ஒன்று பெண்ணின் சினைமுட்டையோடு சேரும் போது அது கருவாகின்றது. இவ்வாறு ஆணின் உயிரணும் பெண்ணின் சினை முட்டையும் இணைந்து உருவான கருவானது சினைக்குளாயிலிருந்து கருப்பையை அடைகின்றது. கருவானது கருப்பையை அடைவதற்கு ஏறக்குறைய ஏழு நாட்கள் எடுக்கின்றது. பெண்ணின் சினைக்குளாயில் இருந்து சில சமயங்களில் இரண்டு சினைமுட்டைகள் வெளிப்பட்டு ஆணின் இரண்டு உயிரணுக்களுடன் சேரும் போது இரட்டைக் குழந்தைகள் உண்டாகின்றது. கருவானது கருப்பையை வந்தடைந்த நாளில் இருந்து வளர்ச்சியடையத் தொடங்குகின்றது. கரு வளரும் ஒவ்வொரு மாத காலகட்டமும் அற்புதமானவை. கரு என்ற சொல் குழந்தையையும் குறிப்பதால் குழந்தையை தன்னுள்ளே கொண்டவள் என்னும் பொருளில் காப்பவதி என்றும் கர்ப்பிணி என்றும் அழைப்பார்கள். கர்ப்பிணி என்றால் கருக்கொண்டவள் எனவும் பொருள்படும். உடலில் ஒரு வளரும் குழந்தை உடைய நிலையைக் கர்ப்பகாலம் என்றும் கர்ப்பம் தரித்த பெண்கர்ப்பிணி என்றும் அழைக்கப்படுவாள்.

ஒரு பெண் கர்ப்பம் தரித்தால் அதற்குரிய முதலாவது அறிகுறி மாதவிடாய் தடைபடுதல் ஆகும். லேசான மயக்கமும் வயிற்றுப்புரட்டலும் வாந்தி எடுக்க வேண்டிய உணர்வும் உண்டாகும். ஆனால் ஒரு சிலருக்கு வயிறு சம்பந்தமான உபாதைகள் இருக்கும் பட்சத்தில் மாதவிடாய் தள்ளிப் போனாலும் போகலாம். இந்த நிலையில் சந்தேகம் இருப்பின் சிறுநீரைப் பரிசோதிதுப் பார்த்தால் உண்மை தெரியும்.

மாதவிடாய் நின்றதில் இருந்து ஒரு சில நாட்கள் சென்ற பின்

www.tamilarangam.net

தான் மருத்துவர்கள் கர்ப்பம் தரித்திருப்பதை உறுதிப்படுத்துவார்கள். மாதவிடாய் நிற்பது என்பது ஒரு அறிகுறி தான். ஆயினும் ஒரு பெண்ணில் கரு உருவாகியிருப்பதை அவளின் உள்ளுணர்வு நிட்சயம் உணர்த்திவிடும். ஒரு புதிய ஜீவன் தம்முள் தோன்றியுள்ளதையும் இரத்தோட்டம் புது உத்வேகம் பெற்றுள்ளதையும் முதன்முதல் கர்ப்பம் தரித்த ஒரு பெண்ணால் நன்கே அறிய முடியும்.

நமக்குப் பிறக்கும் பிள்ளை ஒரு குறையும் இல்லாமல் பிறக்க வேண்டும் என்று நாம் இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றோமோ, நம் மனதில் உள்ளதை எப்படிச் சொல்கின்றோமோ அதே போல் மருத்துவர்களிடமும் கர்ப்பவதிகள் நம்பிக்கை வைத்து அவர்களின் உபாயப்படியும் நடந்து கொள்வது மிகவும் முக்கியம்.

ஒரு பெண்ணின் வயிற்றில் கரு உண்டாகி விட்டதென்றால் அவளின் நிலையே வேறு. அவளுள் நிகழும் ஒவ்வொரு மாற்றமும் அவளைத் திக்குமுக்காடச் செய்து விடுகின்றது. உள்ளேயிருக்கும் சிசுவின் லீலைகளை உணரும் போது அவள் உள்ளம் ஆனந்தத்தில் மிதக்கும். கர்ப்ப காலத்தில் சில இடையூறுகள் வந்தாலும் அதற்காக அவள் வருத்தப்படுவதில்லை. நமக்கு என்ன கஸ்ரம் வந்தாலும் பரவாயில்லை குழந்தை நன்கு வளர்ந்து பிறக்க வேண்டும் என்று தான் அவளின் எண்ணம் இருக்கும்.

அடுத்து முதல் மாதக் கருவானது மிகவும் சிறிய அளவிலேயே இருக்கும். முன் சொல்லியது போல் ஆணின் ஜீவசத்தில் இருந்து வெளிப்படும் ஆயிரக்கணக்கான பல உயிரணுக்களில் ஏதேனும் ஒன்று தான் சினை முட்டையுடன் சேர்ந்து கருவாகின்றது. மீதமுள்ள உயிரணுக்கள் கருச்சுவற்றிலே நிலைத்து நஞ்சும் நஞ்சுக் கொடியும் ஏற்பட வழி கோலுகின்றது. நஞ்சுக் கொடியை தொப்புள் கொடி என்றும் சொல்வார்கள். இந்த நஞ்சுக் கொடியின் மூலமாகதத் தான் தாயின் இரத்தம் வளரும் குழந்தைக்குச் செல்கின்றது. சிசு வளர வளர நஞ்சுக் கொடியும் கூடவே வளர்ந்து வருகின்றது. குழந்தை பிறந்தவுடன் நஞ்சையும் நஞ்சுக் கொடியையும் அகற்றி விட வேண்டும். நஞ்சும் நஞ்சுக் கொடியும் இறைவனின் அற்புதங்கள் தான். ஏனென்றால் குழந்தை வளரும் வரை இவை கட்டாயம் தேவை. குழந்தையின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றும் இவற்றை குழந்தை பிறந்தவுடன் அகற்றாவிட்டால் விளைவு விபரீதமாகி விடும்.

முன்பு சொன்னது போல் கருத்தரித்து ஏழாவது நாளில் இருந்து

( தொடர்சி பக்கம் 26 ) 

www.tamilarangam.net

# உன்
# கண்களும்
# நானும்...

புழுத்த நாத்தம் நாறியது

நிலத்தில் விழுந்தோடிய
சோற்றுப் பருக்கையை
காலால் மிதித்து
கிழித்து
சிவரில் பூசினேன்

காகங்களில்லா ஊரிது
பருக்கை பொறுக்கவும்
ஒன்றுமில்லை
அது
என் காயங்களை
எனக்கு ஞாபகமூட்டியது

புழுத்த நாத்தம் நாறியது

வேலிப் பொந்தில்
காலை இடுக்கி
துள்ளிக் கிள்ளி
பால் குடித்த காதலது

கறுப்பிதான்
ஆனால்
கண்கள் பேசாத கதையில்லை

www.tamilarangam.net

இந்தக் காயங்களை
அந்தக் காயங்களில் குந்தியிருக்கும் உன் கண்களை
நான்
எங்கே கொண்டுபோய்க் கொட்டுவது
கொத்திச் செல்ல
ஒரு காகமும் இல்லாதபோது

புழுத்த நாத்தம் நாறியது
என் மனம்

அழகாய் மெல்லியதாய்
என் விரல்களைப் போல
ஓலை சீவி பாயிழைப்பாய்
உன் கைகள்
வேகவேகமாய்
குண்டு குண்டாய் பாயில் கவிதையெழுத
என் கண்களை
நான் வாங்கிவிடுவேன்

அந்தக் கண்களை
நான் தொலைக்க வேண்டும்
புழுத்த நாத்தம் நாறியது

என்னமோ தெரியவில்லை
நேற்று
வெண்மையாய் தொங்கித்திரிந்த வெயில்
இன்று
கறுப்பாய் இருந்தது.

-ஆனந்தி
(சுவிஸ்)

www.tamilarangam.net

சிசு வளர ஆரம்பிக்கின்றது. அதாவது அதுவும் உங்கள் இன்ப துன்பங்களில் பங்கெடுக்கின்றது, பாதிக்கப்படுகின்றது. அதனால் தான் கர்ப்பவதிகள் கர்ப்ப காலத்தில் மனதை மிகவும் லேசாக வைத்துக் கொள்ள வேண்டும். எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் இடம் தரலாகாது. தெய்வச்சிந்தனையும் தெய்வ வழிபாடும் தோத்திரப் பாராயணங்களும் சிசுவிற்கு நன்மை பயக்கும். எதிர்காலத்தில் நம் குழந்தை நல்லவனாக வளர வேண்டும் என்று தானே ஒவ்வொரு தாயும் விரும்புவாள். அப்படித் திகழ வேண்டுமாயின் அது தாயின் கையில் தான் உள்ளது. ஆனால் புலம்பெயர்ந்து வந்த நாட்டில் அது தந்தையின் கையிலும் உள்ளது. தனியே இங்கிருக்கும் பெண்களுக்கு தாயாக தாதியாக ஆலோசகராக இருக்க வேண்டிய ஒரே மனிதர் அவளது கணவர் மட்டும் தான்.

எங்கள் நாட்டில் இருந்து இளைஞர்களாக வந்த ஆண்கள் பலருக்கு குழந்தை பிறத்தல், வளர்த்தல் என்பது பற்றி அனுபவம் மிகக் குறைவு என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் அங்கு இந்த அலுவல்களெல்லாம் பெண்ணின் தாயோ, அல்லது மாமியாரோ, பாட்டிமாரோ, அல்லது பக்கத்து வீட்டுக்காரரோ உதவி செய்வார்கள். அவர்களின் எல்லா அனுபவங்களும், கைமருந்துகளும் பேருதவியாய் பெண்களுக்கு அமைந்துவிடும். அத்தோடு பிரசவ அறைப்பக்கமே ஆண்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பிள்ளை பிறந்ததும் அதற்கு வேண்டிய எல்லா வேலைகளையும் பெண்களே செய்வார்கள். அதனால் அனேகமான ஆண்கள் அந்த விடயத்தில் அனுப வமற்றவர்களாகவே இருக்கின்றார்கள். அதனால் இங்கே தனியே இருக்கும் கருத்தரித்த பெண்களுக்கும் குழந்தை பிறந்தவுடன் செய்யும் அலுவல்கள் எல்லாம் ஆண்களே கட்டாயம் செய்ய வேண்டும். அத்தோடு இங்கு பெண்ணின் கணவன் பிரசவ அறையில் நின்று எல்லா உதவிகளையும் அவர்களுக்குச் செய்வதற்கு அனுமதியும் வழங்கப்பட்டிருப்பதும் பெண்களுக்குச் சற்று ஆறுதலாக இருக்கின்றது. ஆதலால் தனியே இருக்கும் பெண்களுக்கு அவர்களது கணவர்கள் கருவளர்ச்சிக் காலத்தில் தைரியமூட்டும் ஆலோசகரா கவும் பாதுகாத்து வளர்ப்பதில் தாதியாகவும் பிரசவத்தின் போது தாயாகவும் இருக்க வேண்டும். கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் அவர்களைச் சந்தோசமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பும் இவர்களுக்குத் தான் உண்டு. பெண்ணின் சந்தோசமின்மையால் பிள்ளை பல வழிகளில் பாதிக்கப்படுவதால் பிள்ளையின் முன்னேற்றத்தில், பராமரிப்பில் தந்தையின் பங்கும் அதிமுக்கிய மானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புராணக் கதைகளில் கூட நாம் படித்திருகின்றோம். வெளி இன்ப துன்பங்களால் குழந்தை எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றது. உதாரணமாக இரணியன் என்னும் கொடிய அரக்கனுக்கு தெய்வபக்தி நிறைந்த பக்த்தபிரகலாதன் பிறந்திருக்கின்றான். அது எப்படியென்றால் இணையன் மனைவி கர்ப்பகாலத்தில் சிறிமத்நாரயணின் மகிமைகளை நாரதர் மூலம் கேட்டு ரசித்ததினால் இப்படியொரு தெய்வக் குழந்தையாக பக்த்தப் பிரகலாதன் தோன்றினான். மகாபாரதத்திலே அபிமன்னன் பத்மவியூகம் அமைப்பதை தாயாகிய சுபத்திரையின் வயிற்றில் இருந்த போது தந்தை அருச்சுனன் சொல்லக் கேட்டானாம். இதனாலத் தான் பெண்கள் கர்ப்பகாலத்தில் நல்லவற்றையே பேச வேண்டும், நல்லதையே செய்ய வேண்டும், நல்லதையே படிக்க வேண்டும். தீயகுணங்களுக்கு இடம் தரலாகாது.

கர்ப்பவதிகள் பொதுவாக உணவு விடயத்திலும் வேறு பல விடயத்திலும் கவனமாக இருக்க வேண்டும். தாயின் ஊட்டம் தான் சிசுவின் ஊட்டம். கர்ப்பகால முதல் மூன்று மாதத்திலும் விரும்பிய உணவை உட்கொள்ளலாம். சிலர் இரண்டாம் மாதத்தில் மாங்காய் புளியங்காய் போன்ற புளிப்புப்பதார்த்தங்களை விரும்பி உண்பார்கள். சிலருக்கு வாந்தி குமட்டல் அதிகமாக இருக்கும். இதனால் சரியாக உணவு உண்ணாமல் இருக்கலாகாது. நல்ல உணவுகள்,பழங்கள் போன்றவற்றை தினந்தோறும் உட்கொண்டே ஆக வேண்டும்.

கர்ப்பகாலத்தில் வழக்கம் போல் மாதவிலக்கு ஏற்படும் நாட்களில் இரண்டாவது மாதம் ஒரு சிலருக்கு உதிரம் சிறிது வெளியேறலாம். இது குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இருந்தும் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது. இரண்டாம் மாதம் கரு 1.3செ.மீ நீளம் வளர்ந்திருக்கும். தலை உடல் போன்றவை நன்கு தோன்றக் கூடியதாக இருக்கும். சிலருக்கு வழக்கத்தை விட சிறுநீர் கழிப்பது அதிகமாக இருக்கும்.

கர்ப்பவதிகள் உண்ணும் உணவில் குழந்தை வளர்ச்சிக்கு ஏற்ற புரதங்கள் அவசியம். இரும்பு,கல்சியம், கொண்ட உணவுகள் கனியுப்புக்கள், விற்றமின்கள், நிறைந்த உணவுகளையும் உட்கொள்ளுதல் அவசியமாகும்.

மூன்றாம் மாதம் சிசுவின் தலையானது சற்றுப் பெருத்து உடலும் பெருத்து விரல்களும் ஏற்பட்டிருக்கும். 9 செ. மீ நீளமும் 14கிராம் நிறையும் கொண்டதாக இருக்கும். பனிக்குட (பன்னீர்குடம்) நீரிலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிசுவானது நன்கு மிதந்து கொண்டிருக்கும். இந்த நீர் தான் சிசுவிற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்கின்றது. கர்ப்பவதிகள் கட்டாயம் மலச்சிக்கல் வராமல் பாதுகாத்தல் வேண்டும். அத்தோடு உறக்கத்திலும் கவனம் எடுக்க வேண்டும். முதல் இரண்டு மாதத்தில் கடினமான வேலையும் தூரப்பிரயாணங்கள், துள்ளுதல், ஓடுதல் போன்றவற்றையும் தவிர்த்தல் நல்லது.

நான்காம் மாதத்தில் அடிவயிறு சற்றுப் பெருத்துக் காணப்படும். தலையில் மூளையும் பிற உறுப்புக்களும் தோன்றியிருக்கும். இதயமும் துடித்துக் கொண்டிருக்கும். பெண்ணின் மார்பகங்கள் பருமனில் அதிகரிப்பதுடன் சிறிது நோவும் ஏற்படும். முலைக்காம்பைச் சுற்றியுள்ள பகுதி கூடுதலான கருமை நிறத்தைப் பெறும். சிசுவிற்கு ஆண்குறியோ, பெண்குறியோ தோன்றியிருக்கும்.

ஐந்தாம் மாதம் கர்ப்பவதிகளுக்கு ஒரு அற்புதமான மாதம். ஆம் இந்த மாதத்தில் தான் சிசுவின் அசைவை உணர முடியும். சிசு உள்ளுக்குள் உதைத்துக் கொள்ளும் இன்பநிலையை தாயானவள் உணரமுடியும். சிசுவின் வளர்ச்சியில் வேகம் கூடும். உரோமம், நகங்கள், குடல், கல்லீரல் போன்றனவும் தோன்றியிருக்கும். கணவன் மனைவி தாம்பத்திய உறவை மிகக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். மூர்க்கமான நடவடிக்கைகளினால் உள்ளேயிருக்கும் சிசுவிற்கு ஏதாவது நடந்து விடலாம். ஒரு சிலர் இதைத் தவிர்ப்பதும் உண்டு. ஐந்தாம் மாத இறுதியில் சிசு 25செ. மீ நீளம் வளர்ந்திருக்கும். தாயானவள் ஓய்வு, உறக்கம், உடற்பயிற்சி போன்றவற்றை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆறாம் மாதம் தலையில் எலும்புகள் நன்கு வளர்ந்திருக்கும். 620 கிராம் நிறையுடையதாயிருக்கும். கர்ப்பிணிகள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோசமாகவும் இருக்க வேண்டும். உடைகளை இறுக்கமாக அணியக் கூடாது.

ஏழாம் மாதம் 38 செ.மீ நீளமும் 907 கிராம் நிறையும் உள்ளதாக இருக்கும். பன்னீர்க்குட நீரில் குழந்தையின் உல்லாச விளையாட்டுக் கள் தாயை இன்ப நதியில் நீந்த வைக்கும். வயிறு பெருப்பதுடன் வயிற்றுச் சுவர்கள் இழுபடுவதால் கோடுகள் பல அடிவயிற்றிலும் வயிற்றிலும் தோன்றுவதைக் காணலாம்.

குழந்தை எட்டாம் மாதம் 1.8 கிலோ நிறையுள்ளதாக இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கர்ப்பகாலம் அதாவது சிசு வயிற்றினுள் இருக்கும் காலம் ஒன்பது மாதம் 10 நாட்கள் ஆகும். ஒன்பதாம் மாதக் கடைசியில் சிசு 2.38 கிலோ நிறையும் 46 செ.மீ நீளமும் உள்ளதாக வளர்ந்திருக்கும்.

ஒன்பது மாதங்கள் கடந்த பின்பு ஒவ்வொரு நாளும் மிகுந்த எதிர்பார்ப்புடன் தான் இருக்க வேண்டும். தாயாகும் பெண்கள் பல விடயங்களை முக்கிய கவனத்திற் கொள்ள வேண்டும். அதில் நற்சுத்தம் மிக முக்கியமாகும். நல்ல போஷாக்குள்ள உணவுகளை எடுத்தல் அதாவது கல்சியம் இரும்பு சேர்ந்த காய்கறி உணவும் புரத உணவும் கூடுதலாக எடுத்தல் வேண்டும்.

கர்ப்பிணியின் பிரச்சினைகள் பற்றி தெரிந்தவர்களிடம் மனம் விட்டுக் கதைத்து அவை பற்றி அறிந்து கொள்ள முற்பட வேண்டும். இக்காலத்தில் பிள்ளை வளர்ப்பு பற்றியும் அறிந்து கொள்ளுதல் நன்று. போதுமான உடற்பயிற்சியும் ஓய்வும் பெறல் வேண்டும். குடும்பத்தில் அந்நியோன்னியத் தொடர்பு ஓய்வு நேரங்களை பிறருடன் சந்தோசமாக கழித்தல் வேண்டும். சமயசம்பந்தமான நன் நூல்களை வாசித்தல் நல்லது.

அடுத்து பின்வரும் அபாய அறிகுறிகள் கர்ப்பவதிகளுக்குத் தோன்றுமாயின் உடனே வைத்திய உதவியை நாட வேண்டும். முகம் கை கால் வீக்கம், சில சமயங்களில் மங்கலான பார்வை, உடல் வெளிறுதல், கண்மடல் உட்பக்கம் வெளிறல், இரத்தப் போக்கு நிறை அதிகளவு அதிகரித்தல், வலி, குழந்தையின் அசைவு மறைதல் போன்றன.

அதோடு இதில் எழுதியுள்ள சிசுவின் நிறை நீளம் போன்றன கிட்டத்தட்ட அல்லது சராசரி நீள நிறையும் ஆகும். இவை ஒவ்வொருக்கொருவர் வித்தியாசப்படவும் இடமுண்டு.

டென்மார்க்கில் இளம் கர்ப்பவதிகளுக்கு ஓரளவாவது உதவியாய் இருக்கும் என்ற நோக்கத்தில் சில டெனிஸ் புத்தகங்களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களும் இதில் அடங்கும்.

முற்றும்.

www.tamilarangam.net

# கடிதம்...

அன்புடன் ஆசிரியர் குழுவினருக்கு,

மலர் 34 எப்போதும் போல் நீண்ட இடைவெளிக்குப் பின்பு கிடைத்தது. அதில் 'பெண்கள்' என்ற தலைப்பில் வெளியான செல்வியின் கட்டுரை தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

கட்டுரையின் முழு வடிவமுமே பெண்கள் மீது பிழையில்லை, ஆண்களே பிழையானவர்கள் என்ற வகையில் அமைந்திருக்கின்றது. இன்றைய புலம்பெயர் வாழ்வு இலக்கியத்தில் பெண்ணியம், பெண்ணடிமை, ஆணாதிக்கம், கருக்கலைப்பு.... போன்ற சொற்பதங்கள் அதிகமாகப் பாவிக்கப்படுகின்றது. இதுவோர் (STYLE) எழுதுநடை அல்லது நாகரீகம் போலும் ஆகிவிட்டது.

செல்வி அவர்கள் குறிப்பிடுவது போலவோ அல்லது சஞ்சீவி உட்பட, வேறு பத்திரிகைகள் குறிப்பிட்டு எழுதுவது போலவோ தனித்து ஆண்கள் மட்டும் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு கட்டிவிட முடியாது என்பது என் கருத்து. குறிப்பாக இந்த பெண்ணடிமைப் பிரச்சனையில் ஆண்களைவிட பெண்களே மிகவும் மோசமாக நடந்துகொள்கின்றார்கள் என்றால் மிகையாகாது. இன்று வரையிலும் பெண்ணடிமைத் தனத்திற்கு உறுதுணையாக இருக்கும் விடயங்களை உடைத்தெறிவதற்காக எத்தனை பெண்கள் முன்வந்திருக்கின்றார்கள்....? உதாரணமாக இங்கு நடைபெறும் திருமணங்களுக்கோ, அல்லது பூப்புனித நீராட்டு வைபவங்களிலோ முன்னின்று செயற்படுவதற்கு விதவையோ அல்லது பிள்ளை இல்லாத பெண்களோ முன்வருவதில்லை. இதனை ஆண் வர்க்கம் ஏற்றுக்கொண்டாலும், பெண் வர்க்கமே அதற்கு தடைக் கல்லாய் நிற்கின்றது. இவை இங்கேயும் இடம்பெறும் சாதாரண நிகழ்வுகள்.... 'வீட்டிலே சமையல் வேலை, குழந்தை பராமரிப்பு சகலதையும் பெண்களே செய்யவேண்டியுள்ளது.' என்று செல்வி குறிப்பிடுகின்றார். எந்த நாட்டிலே ஒரு தமிழ் ஆண்மகன் சமையல் வேலை செய்யாமல் இருக்கின்றான். குழந்தை பராமரிக்காமல் இருக்கின்றான். இந்த இயந்திர வேகச் சமூகத்தில் பொருளாதார நெருக்கடிகளை ஓரளவாவது சமாளிப்பதற்காய் இரவு வேலைக்குப் போய்வந்தும் கூட வீட்டில் குழந்தையினை பராமரிப்பதோடு மட்டும் நிக்காது தனது மனைவி வேலையால் களைப்போடு வரப்போகின்றாள் என சமைத்துவைத்து அவளது வரவுக்காக காத்திருப்போர் இன்று பலர் இருக்கின்றனர். இவ்விடயம் செல்விக்குத் தெரியாது போனமை கவலைக்குரியதுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த புலம்பெயர் வாழ்வில் எமது தமிழ்ச் சமுதாயத்திற்கு கிடைத்த முதல் வெற்றியே ஆண்கள் எல்லோரும் சுவையாக சமைத்துச் சாப்பிடக் கற்றுக்கொண்டமைதான் என்பதை நாம் ஒருவரும் மறுக்க முடியாது.

இன்று தமிழர்கள் மத்தியிலோ அல்லது வெளிநாட்டவர்கள் மத்தியிலும் கூட ஏற்படும் விவாகரத்துகளுக்கு காரணங்களாக இருப்பவர்கள் ஆண்களை விட பெண்களே அதிகமானோராய் உள்ளனர் என்பது நாளாந்த தகவல்கள். ஒருபக்கம் பெண்கள் பகுதியும் நியாயம் கூறலாம், ஆனால் ஆண்கள் சேர்ந்து வாழ விரும்பினாலும் பெண்களே வெறுத்து வேறோர் புதிய வாழ்க்கை தேடிப்போவோராய் உள்ளனர். அதற்கு இந்த புலம்பெயர் நாடுகளின் சட்டங்களும் ஏதுவாயிருந்து உதவுகின்றது.

இதனை மேலும் விபரிக்க தேவையில்லை என நினைக்கின்றேன். எமக்கொரு வாழ்வு எங்கள் மண்ணில் யாவருக்கும் கிடைத்து, ஓர் புதிய அரசியல் வலுவுடன் சேர்ந்த பொருளாதார விடுதலையினை எய்தும்போதும், இப்படிப்பட்ட அடிமட்டப் பிரச்சனைகள் முதல் எங்கள் சமூகத்தினை குட்டிச் சுவராக்கும் சகல பிரச்சனைகளுக்குமான தீர்வினை காணலாம் என நம்புகின்றேன்.

– வ.பவித்திரன்.

---

# பகுத்தறிவாளர் டாக்டர் ஏப்ரகாம் ரி. கோவூர்

உலகப் புகழ்பெற்ற பகுத்தறிவுவாதியும், உளவியல் மருத்துவரு மான டாக்டர் அபிரகாம் ரி. கோவூர், எல்லா விதமான ஆவியுலகம் மற்றும் ஆன்மீக தோற்றப்பாடுகள் பற்றியெல்லாம் அரை நூற்றாண்டிற்கும் மேலாகத் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, ஈற்றில் அவ்வித நம்பிக்கைகளிலும், கூற்றுக்களிலும் எவ்வித உண்மையும் இல்லை என்ற முடிவுக்கு வந்த ஒரு முதல்தரமான விஞ்ஞானியாவார். உலகிலுள்ள உள, உயிர் ஆராய்ச்சி களிலேயே, அத்துறையில் டாக்டர் பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்ட முதலாமவரும் ஒரேயொருவரும் இவரேயாவர். அமெரிக்காவிலுள்ள மின்னிசோட்ட தத்துவ ஆய்வுக் கழகம் ஆவிகள் தொடர்பான இவரது ஆய்வுக் கட்டுரைக்காக டாக்டர் பட்டத்தை வழங்கிற்று.

சேதன வளர்ச்சிப் படிமுறையிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற் குரிய பொருட்களைச் சேகரிப்பதற்கான இந்து சமுத்திர மற்றும் கரையோர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட 'கெகெல் ஆய்வுப் பயணக்' குழுவில் அங்கம் வகிப்பதற்காக அமெரிக்காவின் 'எர்னெஸ்ட் கெகெல் உயிரின ஆய்வுக் கழகத்தால்' அழைக்கப்பட்ட ஒரே ஆசிய விஞ்ஞானி டாக்டர் கோவூரேயா வார்.

மூடநம்பிக்கைகளை விட்டு எதையும் ஆதாரத்தோடு நம்ப வேண்டும் என்ற மக்களுக்கு போதிப்பதற்காக வாழ்நாட்களை அர்ப்பணித்த டாக்டர் கோவூர் கேரளாவில் திருல்லா என்ற ஊரில் 1898 ஏப்ரல் 10ம் திகதி பிறந்தார். இவர் மல்பார் மார் தொம்மா சிரிய திருச்சபையின் முதன்மைக் குருவான காலஞ்சென்ற கோவூர் எய்பி தொம்மா கத்தனார் அவர்களின் புதல்வராவர்.

டாக்டர் ஆபிரகாம் கோவூரின் தந்தையாரால் அவரது பூர்வீக இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அவரால் நகரத்தில் திருச்சபைக்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட சிறிய கிறிஸ்தவ கல்லூரியில் தமது ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்த இவர் தமது உயர் கல்வியைத் தொடருவதற்காக இவரது இளைய சகோதரருடன் (அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்திலும், ஐ.நா வில் முன்னர் பணியாற்றிய காலஞ்சென்ற டாக்டர் பெகனனு ரி.கோவூர்) கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டார். கல்கத்தாவிலுள்ள பெங்கபாஸி கல்லூரியில் இவர் தாவரவியல் - உயிரியல் பட்டம் பெற்றார்.

கோடயம் சி. எம். எஸ் கல்லூரியில் தாவரவியல் துணை விரிவுரை யாளராக ஈராண்டுகள் பணியாற்றிய பின் டாக்டர் அபிரகாம் கோவூர் யாழ் மத்திய கல்லூரியின் அதிபர் கேஷ் அடிகளாரின் அழைப்பின் பேரில் 1928இல் இலங்கைக்கு குடிபெயர்ந்தார். பிரசித்தி பெற்ற கேஷ் அடிகளார் டாக்டர் கோவூரை ஊட்டியில் (இருவரும்) மலைவாழ் தாவரங்களைச் சேகரிக்கும் பணியிலீடுபட்டிருந்த போது சந்தித்திருந்தார்.

முதலாவது ஆண்டில் யாழ் மத்திய கல்லூரியில் தாவரவியலுடன் இறுதியாண்டு மாணவர்களுக்கு கத்தோலிக்க திருமுறையைப் போதிக்கும் படி இளைஞரான கோவூர் கேட்டுக் கொள்ளப்பட்டார். பரீட்சைக்குப் பிறகு கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்திலிருந்து பெறுபேறுகள் வந்தபோது திருமுறைப் பாடத்தில் கோவூரின் எல்லா மாணவர்களுமே சிறப்புச் சித்தியும் விசேட சித்தியும் பெற்றிருந்தனர். ஆனால் அடுத்த ஆண்டு கோவூருக்கு திருமுறைப் பாடம் கொடுக்கப்படவில்லை. துணை முதல்வரான ஓ.எல். கிப்பன் அடிகளுக்கே அப்பாடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதைப் பற்றி விசாரித்த போது முதல்வரான கேஷ் அடிகள் இப்படிக் கூறினாராம்,

" ஆபிரகாம்! திருமுறைப் பாடத்தில் நீங்கள் சிறந்த பெறுபேறு களை பெற்றுத் தந்தீர்கள்தாம்.... ஆனால் உங்கள் மாணவர்களெல்லாம் திருமுறைப் பாடத்தில் சிறந்த சித்தி பெற்றுள்ளார்களாயினும் அவர்கள் தங்கள் மத நம்பிக்கையை இழந்து விட்டார்களே! "

கேஷ் அடிகளார் ஓய்வு பெற்று இலங்கையிலிருந்து சென்ற பின், 1943 இல் யாழ் மத்திய கல்லூரியில் இருந்து விலகிய டாக்டர் கோவூர் காலி றிச்மன்ட் கல்லூரியிலும் பின்னர் கல்கிசை புனித தோமஸ் கல்லூரி யிலும் பணியாற்றினார். இவர் 1959 இல் ஓய்வு பெற்றபோது கொழும்பு தர்ஸ்டன் கல்லூரி விஞ்ஞான பீடத் தலைவராகப் பணியாற்றிக் கொண் டிருந்தார்.

டாக்டர் கோவூரின் மனைவி 1974 இல் மரணித்த போது அவரது மரண அறிவித்தல் பெரும் பரபரப்பை இலங்கை நாடாளுமன்றத்திலும் ஏற்படுத்திற்று. அந்த மரண அறிவித்தல் இவ்விதம் அமைந்திருந்தது.
“ திருமதி .....அக்கா கோவூர் மரணமானார். எதையும் ஆதாரமின்றி நம்பு கின்ற பொதுமக்கள் கவலைப்படும் பொருட்டு அவர் மனத்தையோ ஆவி யையோ விட்டுச் செல்லவில்லை. அவரது விருப்பப்படி அவரின் உடல் இன்று (வெள்ளி) காலை 8 மணிக்கு கொழும்பு பாமன்கடை ஒழுங்கை திருவல்லா இல்லத்திலிருந்து கொழும்பிலுள்ள பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். மரணச் சடங்குகள் நடை பெறாது. மலர்ச்செண்டுகள் கொண்டு வரவேண்டாம். ”

இவ் அறிவித்தல் இலங்கையிலுள்ள பல பத்திரிகைகளிலும் இடம் பெற்றாலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது மரண அறிவித்தலில் அதைச் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டது. அதைப் பற்றி நாடாளுமன்றத்தில் வினவப்பட்டபோது கத்தோலிக்க மதத்தவரான ஒலிபரப்பு அமைச்சர் ஒரு ரோமன் கத்தோலிக்க மதகுருவினதும் ஒரு பௌத்த பிக்குவினதும் கருத்துக்களின் அடிப்படையில் அது நிராகரிக்கப்பட்டதாக விளக்கமளித்தார்.

மாயைகள் பற்றி ஆராய்ந்து வருபவர் என்ற ரீதியில் டாக்டர் கோவூர் பொது மக்களின் மனங்களிலிருந்து ஆவிகளை பற்றிய ஆதாரமற்ற அச்சத்தை அகற்றுவதற்கு தீவிரமாக ஈடுபட்டதோடு, அற்புதம் செய்பவர்கள், வசியம் செய்பவர்கள், சோதிடங்கள் கைரேகைகள் பார்ப்பவர்கள் ஆத்மீக வாதிகள், எண்கணிதவியலாளர்கள், ஆவியுடன் பேசுபவர்கள் ஆகியோரின் செயல்களையும் மந்திர அனுமானுஸ்ய சக்திகள் எனக் கூறி எதையும் எளிதில் நம்பும் பாமரர்களை ஏமாற்றி வந்த எல்லாவித போலிமனிதர் களையும் அம்பலப்படுத்தி வந்தார். ஆவிகளைத் தேடி அவர் பேய் வீடுகளில் உறங்கியிருக்கிறார். மயானங்களில் அலைந்திருக்கிறார். தனது வாழ்க்கை யின் முக்கிய நிகழ்ச்சிகளை அவர் அசுபமான நேரங்களிலேயே ஆரம்பித் திருக்கிறார்.

அற்புத சக்திகள் என்று சொல்லப்படுவதெல்லாம் ஏமாற்று வேலை கள் என்பதையும், அவர்கள் உளவியல் ரீதியில் தாக்கப்பட்ட நோயாளிகள் என்பதையும், அப்பாவி மக்களை நம்பச் செய்வதற்காக அவர் பின்வரும்

www.tamilarangam.net

சவாலை பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

சவால் :

'கொழும்பு 6, பாமன்கடை ஒழுங்கையிலுள்ள 'திருவல்லா' இல்லத்தில் வசிக்கும் ஆபிரகாம் ரி. கோவூர் ஆகிய நான் மோசடி தவிர்ந்த சான்றாதாரம் கொண்ட நிலைமைகளில் அனுமானுஷ்ய அல்லது அற்புத சக்திகளை செய்து காட்டுகின்ற உலகின் எந்தப் பகுதியிலுமுள்ள எவருக்கும் இலங்கை ரூபாயில் ஒரு இலட்சம் கையளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைப் பிரகடனப்படுத்துகிறேன். இந்தச் சவால், நான் மரண மாகும் வரை அல்லது ஒருவர் என்னை வெற்றி கொள்ளும் வரை பகிரங்க மாயிருக்கும்.

ஆன்மீக பயிற்கள் மூலமோ அல்லது தெய்வீக வரத்தினாலோ அற்புதச் சக்திகளைப் பெற்றுள்ளதாக கூறும் தெய்வீக மனிதர்கள் அர்ச்சிக்கப்பட்டவர்கள், யோகிகள், சித்தர்கள், குருமார்கள், சுவாமிகள் மற்றும் எவராவது பின் குறிப்பிட்டுள்ளவற்றில் ஏதாவது ஒரு 'அற்புதத்தை' நிகழ்த்துவதன் மூலம் இந்தப் பரிசைப் பெறலாம்.

1. முத்திரையிடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ஒரு பண நோட்டின் இலக்கத்தை வாசித்தல்.

2. குறிப்பிட்ட ஒரு பண நோட்டையே போன்ற இன்னொன்றை அற்புதத்தால் உருவாக்குதல்.

3. கடவுளின் உதவி பெற்று கால்களில் கொப்பளம் ஏற்படாமல் எரிகின்ற தணலில் அரை நிமிடம் அசையாது நிற்றல்.

4. நான் கேட்கின்ற ஒன்றை ஒன்றுமில்லாமையிலிருந்து (உருவாக்கி) எடுத்துத்தரல்.

5. அற்புத சக்தியை பிரயோகித்து ஒரு திடப்பொருளை அசைத்தல் அல்லது வளைத்தல்.

6. உணர்வுச் சக்தியைப் பிரயோகித்து இன்னொருவர் மன எண்ணத்தைக் கூறல்.

7. பிரார்த்தனை, ஆன்மீகச் சக்தி, புனிதநீர், புனிதநீறு ஆசீர்வதித்தல் போன்ற எதையாவது பிரயோகித்து துண்டிக்கப்பட்ட உறுப்பை ஒரு அங்குல மாவது வளரச் செய்தல்.

8. யோக சக்தியின் மூலம் அந்தரத்தில் நடத்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9. யோக சக்தியின் மூலம் இருதயத் துடிப்பை ஐந்து நமிடங்களுக்கு நிறுத்தி வைத்தல்.

10. நீரின் மேல் நடத்தல்.

11. உடலை ஓரிடத்தில் விட்டுவிட்டு இன்னோரிடத்தில் தோன்றுதல்.

12. யோக சக்தியின் மூலம் முப்பது நிமிடங்களுக்கு சுவாசிக்காமலிருத்தல்.

13. அறிய முடியாத (பகுத்தறிவுக்கு எட்டாத) ஏதோவோர் தியான முறை மூலம் ஆக்கபூர்வமான அறிவை அல்லது ஞானத்தை உருவாக்குதல்.

14. மறு பிறப்பின் மூலமோ அல்லது புனித அல்லது கெட்ட ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டோ தெரியாத ஒரு மொழியைப் பேசுதல்.

15. நிழற்படம் எடுக்கக் கூடியதாக ஒரு ஆவியையோ தேவதையையோ தோற்றுவித்தல்.

16. புகைப்படம் எடுத்தபின் அப்படத்திலிருந்து மறைத்தல்.

17. தெய்வீகச் சக்தியைக் கொண்டு பூட்டப்பட்ட ஒருஅறையிலிருந்து வெளியே வரல்.

18. ஒரு பொருளின் நிறையின் அளவை அதிகரித்தல்.

19. மறைத்து வைக்கப்பட்ட ஒரு பொருளைக் கண்டு பிடித்தல்.
20. தண்ணீரைப் பெற்றோலாகவோ, திராட்சை ரசமாகவோ மாற்றுதல்.

21. திராட்சை ரசத்தை இரத்தமாக மாற்றுதல்.

22. சோதிடமும் ரேகை சாஸ்திரமும் விஞ்ஞானபூர்வமானவை என்று பாமரர்களை ஏமாற்றுகின்ற சோதிடர்களும் ரேகை சாஸ்த்திரிகளும் என்னால் தரப்படுகின்ற பத்து கைரேகை அடையாளங்களில் அல்லது பத்து ஜாதகக் குறிப்புகளிலிருந்து ஆண், பெண், வாழ்பவர், மரித்தவர் என்று சரியாக (ஐந்து சதவீத தவறு என்ற எல்லையுடன்) தெரிவு செய்து துளியும் பிசகாத பிறப்பு நேரம், தீர்க்கரேகை அட்சரேகையின்படி பிறந்த இடம் என்பவற்றைக் கூறிவிட்டால் எனது பரிசை வென்றெடுக்கலாம்.

1963 இலேயே இந்தச் சவாலை டாக்டர் கோவூர் வெளிப்படுத்தி உலகமெங்கும் உள்ள பத்திரிக்கைகளில் பிரசுரித்தாலும் அவரிடமிருந்து எவரும் ஒரு சதத்தையாவது பெற முடியவில்லை. 1975 இல் அவர் இந்தியாவெங்கும் இரண்டு 'தெய்வீக அற்புதத்தை' அம்பலப்படுத்தும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு முன்பே மேலே குறிப்பட்ட சவாலின் பிரதிகள் எண்ணற்ற சோதிடர்கள், ரேகை சாஸ்திர நிபுணர்கள், தெய்வீக மனிதர்கள் எனக் கூறப்பட்டவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருந்தன. பெங்களூரைச் சேர்ந்த ஒரு டாக்டர் மட்டும்தான் சவாலை ஏற்று பரிசுப் பணத்தை வைப்புச் செய்ய முன்வந்தார். அதன் பெறுபேறு தமது பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு டாக்டர் கோவூர் இலங்கைக்கு திரும்பிய போது அந்த பரிசுப் பணத்தை வென்று சென்றது தான்.

தெய்வீகமானவர்கள் அல்லது அற்புதம் நிகழ்த்துபவர்கள் என்ற போர்வையின் கீழ் அப்பாவிகளையும் எளிதில் ஏமாற்றக் கூடியவர்களையும் ஏமாற்றுகின்றவர்களுக்கெல்லாம் டாக்டர் கோவூர் பெரும் அச்சுறுத்தலாகவே திகழ்ந்தார்.

நன்றி : நிர்மாணம்.

*தொடர்:4* ——

## குர்திஸ்தான் விடுதலையும் கவிதையும்

- யமுனா ராசேந்திரன் (தமிழாக்கம்)

**1.அப்துல்லா பெஸீவ் (Abdullah Pashew) 1945 ஆம் ஆண்டு பிறந்தவர். மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். 1970 ஆம் ஆண்டுகள் தொடங்கி தொடர்ந்து நாடுகடந்து வாழ்பவர். ரஷ்யா, லிபியா, ஸ்வீடன் என அலைந்தவர். மூன்று தொகுதிகள் வெளியிட்டிருக்கிறார்.**

### தூங்காத இரவு....

மூன்றிலிரண்டுபகுதி இரவு கடந்துவிட்டது
தூங்கு என் மகவே தூங்கு.
என் உள்ளங்கையில் தலைவைத்து
தோள்களில் உறங்கு
நான் தூங்கக் காத்திராதே இன்று நான்
விழித்திருக்க வேண்டும் நான்
தூங்கமுடியாது.
நீ படுத்தவுடன் தூங்கப் போவாய்
இயற்கை கடின முகம் கொண்டது இதன்
மூச்சும் கடினம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காற்றின் சப்தம் மரங்களின் இரைச்சல்
மேகங்களின் உறுமல் மழைத்தூறல் என்
கடவுளே, உன்னை எழுப்பிவிடும் என்று நான்
பயப்படுகிறேன்.
உன் கனவுச்சங்கிலியின் சின்ன இழைகளை
அவிழ்த்து விடுமென.

தூங்கு என் மகவே தூங்கு
எனது உள்ளங்கையில் தலைவைத்துக்கொள்
எனது தோள்களில் சாய்ந்துகொள்
நான் தூங்கக் காத்திராதே
உனைப் பாதுகாக்கவென நான் தூங்காதிருக்க
வேண்டும் நான்
தூங்க முடியாது.

## மொஹமத் காகி (MOHAMMED KHAKI)

**1953 ஆம் ஆண்டு ஈரான்பகுதி குர்திஸ்தானில் பிறந்தவர். பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர், செய்தி எழுத்தாளர், கவிஞர், வானொலி ஒலிபரப்பாளர். 1989 சுவீடனுக்கு வந்து 1990 முதல் இலண்டனில் குர்திஸ் மனித உரிமை தொடர்பாக தொடர்ந்து வேலை செய்துவருகிறார்.**

### அன்பு மகன் அலனுக்கு......;

**வீட்டைப்பிரிந்த சோகத்தின் கிழக்குத்திசையினின்று
இடம்பெயர்ந்து மீளவரும் பறவைகளே!
எனது குட்டிமகளை அங்கு நீங்கள்
பார்த்தீர்களா?**

**காற்றே! ஏன் மௌனம்?
என் துக்கம் படபடக்கும் இமைகள்
சிறகடிக்கும்
சின்னஞ் சிறுசிட்டைப் பார்த்தீர்களா?**

www.tamilarangam.net

அலைகளே, சத்தம் போடாதீர்
நாதமே நிற்க, காற்றே காடுகளைக் கலைக்காதே

பட்டாம் பூச்சிகளே,
மெதுவாகச் சிறகடியுங்கள்
இல்லாதுபோனால் எனது மகளின் விழிகளில்
தூங்கும் அரபுமான்களை திடுக்கிடச் செய்துவிடுவீர்கள்.

## ஷாகின் பி ஷோரக்லி (SHAHIN B SOREKLI)

**1946ஆம் ஆண்டு பிறந்தவர். சிரியா, துருக்கி எல்லையில் உள்ளது இவர் பிறந்த ஊரான மஸ்ரா. 1968இல் ஆஸ்த்திரேலியாவுக்கு இடம் பெயர்ந்தவர். அன்றிலிருந்து அங்கேயே வசித்துவருகிறார். ஆஸ்த்திரேலிய பள்ளிக்கூடங்களில் குர்திஸ் மொழி படிப்பிக்கிறார். ஆஸ்த்திரேலிய குர்திஸ் நட்புறவுக் கழகத்தின் ஸ்த்தாபகர். 5 புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். அரபு, ஆங்கிலம், ஜெர்மன், குர்திஸ் மொழிகளில் கலாச்சார – அரசியல் – கல்வியியல் கட்டுரைகள் எழுதிவருகிறார்.**

### இரவினூடு பயணங்கள்.....

மூன்றுமுறை நான் பிறந்தேன்
முதல் முறை அடக்குமுறை ஆட்சிசெலுத்திய
குர்திஸ்தானில்
வரலாறு இரத்தத்திலும் நெருப்பிலும்
எழுதப்பட்ட
மனித உரிமைக்கு அர்த்தமேதுமற்ற நாட்டில்

எனது இரண்டாம் பிறப்பு
1965 ஆம் ஆண்டு வியன்னாவில்
காசற்ற அன்னியன் நான் முக்கியத்துவப்படுத்த
ஏதுமில்லை
எனது அலைதல் தொடங்கியது பொனாக்கிலிய
வந்து சேரும் வரை
எனது மூன்றாம் பிறப்பு அக்டோபர் 1968
நான் பின்னோக்கிப் பார்க்கையில்
ஆஸ்த்திரேலியா எனக்கு என்னவெல்லாமோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொடுத்திருக்கிறது ஆயினும்
எனது சிந்தனை இதயம் முழுவதிலும்
நான் எனது முதற் பிறப்பாலேயே நிறைந்திருக்கிறேன்.

ஒவ்வொரு இரவும்
'குர்திஸ்தான் கல்லறைகளை மறவாதே'யென
என் தாய் கதறுவதைக் கேட்கிறேன்.

நான் ஒருமுறை கேட்டேன்: ஏன் கல்லறைகள்
தாயே ஏன் கல்வறைகள்?
அவள் மறுமொழி சொன்னாள்: என்மகனே
குர்திஸ்தான் கல்லறைகளிற்தான் வாழ்கிறது
நள்ளிரவின்பின்
என் உடம்பை ஸிட்னியில் விட்டு
துன்பமும் சித்திரவதையும் நிறைந்த நாடுநோக்கி
சமுத்திரம் மீது பறந்தேன்
துக்கத்தினூடேயும் சாவினூடேயும் குர்திஸ் மக்கள்
தம் தேசத்தை
உயிருடன் வைத்திருந்தார்கள்.
நிறைய கல்லறைகளிடையில் என் தாயின்
கல்லறையை நான் அடையாளம் காண
முடியவில்லை
எல்லா வகையான கல்லறைகள்......

ஹலப்காவிலிருந்து டெஸ்ரிம் வரை
ஹர்க்சக்சிலிருந்து அகிரி வரை
மஹாபத்திலிருந்து போபான் வரை
ஹவ்விலிருந்து எஸடி வரை ✸
நாசகார சக்திகளால் கொல்லப்பட்ட மக்கள்
கதறிக் கொண்டேயிருக்கிறார்கள்
மரணத்தின் பின் வாழ்வதற்கான அவர்கள்
போராட்டத்தின் சாட்சியமாக அழைத்துக்கொண்டு
சோர்வுடன் வேதனையுடன் நான்
ஸிட்னி திரும்பினேன்.

பிறிதொரு இரவு என் தாய் அழைத்தபோது
நான் கெஞ்சினேன் 'அம்மா அன்பு அம்மா

www.tamilarangam.net

ஒரே ஒரு இரவுக்கு குர்திஸ்தான் கல்லறைகளை
என்னிடமிருந்து விலக்கிவை'

ஆழ்ந்த அமைதியுடன் அம்மா வினவினாள்:
'முடியுமா? நிஜமாகவே நீ உறங்க
முடியுமா மகனே? !'
எனது இதயத்தை ஆரத் தழுவினாள்
குர்திஸ்தானுக்கு திரும்ப அதை எடுத்துச் சென்றாள்.

*அழிக்கப்பட்ட முழு கிராமங்களின் பெயர்கள்.

---

## நதி ஓட்டம்

மக்கள் அடித்தேகும்
நதி நீரில் புரண்டோடும்
குப்பை கூழம் போல்
அகதியாய் தஞ்சம் கொள்ள
இடம் மாறிப் போனார்கள்.

அவர்கள் போய்க்கொண்டே இருப்பார்கள்!

கரம் நீண்டோர் குட்டும்போது
தரம் நிமிராதோர் வாழும்வரை......

இந்த நதியோட்டம்
காலம் கடந்தும் நீண்டுசெல்லும்.

இந்தக் குப்பை கூழத்துள்
நானுமொன்றாய்........!!


- லோகநாதன்.செ.

www.tamilarangam.net



# மறுதலி

- முல்லையூரான்.



நெய்ய முடியாத ஒரு மெல்லிய வெள்ளைப் பட்டுச் சேலையால் போர்த்தது போல் காலை இளம் வெய்யில் சூழ்ந்திருந்தது. குளிர் குடித்த மரங்கள் இலையைத் துப்பிவிட்டு அண்ணார்ந்து கொண்டு ஆகாயத்தில் நின்றன.

அந்தப் புகையிரதம் இனிமேற்தான் வர வேண்டும். அதில் பயணம் செய்வது என்பதே ஒரு நல்ல கவிதையைப் படித்த மாதிரி அல்லது தாகத்தோடு ஒரு நல்லிளநீரைச் சுவைத்தது போல.

தொழில் நுட்பங்கள் மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதில் வளர்ச்சியும் வெற்றியும் கண்டு கொண்டது போல, இன்று தொழில் நுட்பத்தின் வளர்ச்சி மனித சொகுசுகளை நிறைவேற்றுவதற்காக அதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோக்கி வளர்ச்சி பெறுகின்றன. இக்கூற்றுக்கு நல்ல உதாரணமாக இந்தப் புகையிரதத்தைச் சொல்லலாம்.

"சிக்குப்புக்கு...... சிக்குப்புக்கு....." என்றோ

"கட.... கட..." வென்றோ புகையிரத ஒலி இந்த உலகத்தில் அறிமுகமானாலும் சப்தமின்றி, ஊர்ந்து வரும் ஒரு மெல்லிய அழகிய வெள்ளைப் புறாவைப் போல அமைக்கப்பட்ட இப்புகையிரதம் சொகுசு வசதி கொண்டது.

இப் புகையிரதத்தில் பயணிக்கும் போது எமது இதயம் அடிக்கும் ஓசையையே கேட்டுக் கொண்டு ஒரு வெண்முகிலில் ஏறிப் பயணிப்பது போன்ற சுகமாக சுகம்.

இதில் பயணம் செய்வதில் எனக்கு மிகவும் விருப்பு. சரி......

புகையிரதம் வந்துவிட்டது.

கையிலிருந்த சிகரட்டை எறிந்துவிட்டு ஏறிக் கொள்கிறேன். அதிக சனக்கூட்டமில்லை. ' கறுப்பன் ஒருவன் வருகிறான் ' என்று என்னை எல்லோரும் பார்ப்பதாக எனக்குள் நினைவு.

அமைதியைக் குலைக்காது மெதுவாக ஒதுங்கி நடந்து எனக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைக்குள் அமிழ்ந்தேன். சாரளத்தோரமாக வெளியே சும்மா பார்த்தேன். என்னைச் சுற்றிலுமான மீதம் மூன்று இருக்கைகளும் காலியாக இருந்தன. எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி, யாராவது வெள்ளைக் காரர்கள் வந்து இருந்து கொண்டால் எனக்கு என்னவோ போல் இருக்கும். காலைக்கையை விட்டு விடாதியாக வைத்துக் கொண்ட பயணம் செய்ய முடியாது. அவர்கள் என்னை ஏதோ மாதிரிப் பார்ப்பது போலிருக்கும். அவர்கள் சும்மா எது செய்தாலும் மனம் ஏதோதோ அர்த்தங்களைக் கற்பித்துக் கொள்ளும். சிலர் தேவையில்லாது கேள்விகளைக் கேட்டுக் கேட்டு என்னை ' நான் ஒரு அகதி ' என்பதை சுற்றிச்சுற்றி குத்தி காட்டிக் கொண்டிருப்பார்கள். அதைவிடவும் இந்தப் பத்தாண்டு கால இந்நாட்டு வாழ்க்கையில் ' அந்த ஒரே கேள்விக்கு ' எத்தனை ஆயிரம் தடவை பதில் சொல்லிக் கொண்டிருப்பது ?

" எந்த நாட்டிலிருந்து வந்தாய் ? " என்று தொடங்கி ......... இனம், மொழி, நாடு, பிரச்சனை என்று வளர்ந்து சுபமாகவோ அன்றி அதுவின்றியோ உரையாடல் முடியும். கேட்டவர் தன்பாட்டில் போய்விடுவார். ஆனால் நானோ அவருக்குச் சொன்ன சரிகளையும், பொய்களையும் நினைத்து நினைத்து போய்க் கொண்டிருப்பதில் சுகமான ஒரு பொழுது யானைக் காட்டில் வழி மாறியது போலாகிவிடும்.

www.tamilarangam.net

இப்படி....... இப்படி.......

ஒருவருமே இப்போது என்முன்னுள்ள காலி இருக்கைகளுக்கு வரவில்லை. இது வரையில் சந்தோசம் தான். புகையிரம் தனது படலையைச் சாத்திக் கொண்டு நகர்ந்தது.

அட ! அந்த மாஸ்ரர். நான் வாழும் கிராமத்தில் வசிப்பவர். ஓடத் தொடங்கிய புகையிரத்த்தினுள் கையிலுள்ள ஒரு பெரிய சூட்கேசுடன் தனது இருக்கையைத் தேடி வந்து கொண்டிருந்தார்.

இந்தாள் இதிலை வந்து இருந்துவிடக் கூடாது என்பது எனது நினைவாக இருந்தது. ஆள் ஒரு அறுவைப் பேர்வழி. சும்மாய் போட்டுப் போட்டுக் கிண்டிக் கொண்டே இருப்பார்.

ஆனால் நல்லவர்.

என் மீது பரிதாபமுள்ளவர். எனது உணர்வுகளுக்காக வருத்தப்படுபவர்.

இருக்கையைத் தேடிக் கொண்டு வந்தவர், எனதருகில் தரித்து நின்று ஆசன இலக்கத்தையும் தனது கையிலுள்ள பயணச்சீட்டையும் சரி செய்து கொண்டு அந்தப்பாரிய பொதியைத் தூக்கி வைத்துக் கொண்டு...... மேலாடை கழற்றி...... கழுத்துக்கு சுற்றும் துணியையும் கழற்றி மடித்து சரி செய்தபடி என்னைக் கண்டு கொண்டார்.

சரி......... இண்டைக்குப் பொழுது சரி.

எதையும் ரசிக்க முடியாது. இவருடன் தான் இந்த 5 மணி நேரப் பயணமும் கதையுடன் முடியப் போகிறது.

கைகுலுக்கி ! குதுகலம் விசாரித்துக் கொண்டு ஆசவாசமாக என் முன்னால் உட்கார்ந்து கொண்டார். சரி தொடங்கலாமா என்பது போல... குரலைச் சரி செய்து கொண்டார்.

ஏற்கனவே பலர் கேட்டுக் கதைத்துவிட்டு போய்விட்டார்கள் பற்றி எனக்குப் பயமேதுமில்லை. ஆனால் இந்த மாஸ்ரர் விடயத்தில் அப்படியல்ல. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொய் சொல்பவனுக்கே ஞாபகசக்தி அதிகம் தேவை. ஏனெனில் யார் யாருக்கு என்னென்ன...... எப்படி எப்படி..... சந்தர்ப்பத்திற்கேற்ப பதிலளித்தேன் என்பது எனக்கு ஞாபகத்தில் வர வேண்டுமல்லவா?

' சிலருக்கு எனது அம்மா பொம்பர் அடித்துச் செத்துப் போனாள் ' என்று சொல்லியிருப்பேன். அதேவேளை வங்கியில் அம்மாவின் பெயருக்கு காசோலை எடுக்கும் போது ஏதோ கஸ்டமாக இருக்கும்.

இந்த மாஸ்ரருக்கு என்னென்ன சொன்னேனோ என்ற அச்சத்தில் பிடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்காமல் கதைத்துக் கொண்டிருந்தேன்.
புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது.
தேள் கொட்டியவன் சொறிய முடியாமல் உட்கார்ந்திருப்பதைப் போன்ற உணர்வு. அப்புகையிரதத்தின் சொகுசையும் என்னால் அனுபவிக்க முடியவில்லை. ஒரே ஊர்க்கதைதான். எதை மறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேனோ அது ஏதோ ஒரு உருவில் வந்துவிடும்.

இன்றைக்கு இந்த மாஸ்ரரின் உருவில் கடற்கரை, நீலவானம், அலை நனைந்த மணற்கரை, அதில் ஒரு சரிந்த தென்னைமரம், தூரத்தே கடலில் செல்லும் ஒரு ஓடம், இப்படி....... இப்படி....... இந்த மனிசன் ஏதோ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தது.
எனது ஊர்அழகானதாம். ஆனால் இந்த போர்தான் பிரச்சனையாம். அந்த அழகிய நாட்டை நான் இழந்துவிட்டேன் என்று கவலைப்படுறாராம்.

எனக்கு விசராய் இருந்தது.
சரி ! மனிசன் சொல்லிமுடிக்கட்டுமென்று 'ஆமாம்' போட்டுக் கொண்டே இருந்தேன். அடிக்கடி எனது முகத்தைச் சரி செய்து கொண்டு அர்த்தமின்றி சிரித்துக் கொண்டிருந்தேன். அவரது கதையைக் கேட்காமலிருக்கவும் முடியவில்லை. ஏனெனில் அடிக்கடி கேள்வியும் கேட்டு வைக்கிறாரே?
ஏதாவது சாப்பிட்டுக் கொண்டே கதைக்கலாமே என்றவாறு தனது பையிலிருந்த ஒரு பெட்டியை உடைத்தார்.
அது ஒருவகை இனிப்புப் பதார்த்தம். பால் நெய்யில் செய்யப்படுவது. ஒரே இனிப்பு. எனக்கோ அந்த பதார்த்தத்தை உண்பதற்கு விருப்பமில்லை.

நான் உறைப்புப்பதார்த்தங்களையே விரும்பி உண்பேன். எனக்கு வாழ்க்கையிலேயே பிடிக்காத அந்த இனிப்புப் பதார்த்தத்தை நீட்டியபடியே ' எடுத்துக் கொள்ளுங்கள் ' என்றார்.
மறுக்க முடியாமல் ஒன்றை எடுத்து உண்டேன். வாய் ஏதோ ஒரு மாதிரிப் போய்விட்டது.
' இன்னும் எடுத்துக் கொள்ளும் ' என்றார்.
அடுத்ததையும் எடுத்துச் சாப்பிட்டேன் என்பதைவிட விழுங்கிக் கொண்டேன்.

' நல்ல சுவையாக இருக்கின்றதல்லவா? ' என வினாவினார்.

' ஆமாம் ஆமாம் ' என பதிலளித்தேன்.
அடுத்து அடுத்து ஒன்றொன்றாய் எடுத்துத் தின்று தின்றே கதைத்துக் கொண்டிருந்தோம். புகையிரதம் காடுகளையும், வயல் வெளிகளையும் ஊடறுத்துக் கொண்டு தனக்கே உரிய சொகுசோடு உருவிக்

www.tamilarangam.net

கொண்டிருந்தது.

அருவருப்போடு அந்த மாஸ்ரருக்காகவே, அவரது முகத்துக்காக தின்று முடித்த அந்த இனிப்புப் பதார்த்தத்தின் அருவருத்த சுவையில் வயிறு சற்று உப்பியது போலவும் அளவுக்கதிகமாக உமிழ்நீர் சுரந்தும் ஏதோ அரியண்டமாக இருந்தது. எனது பயணத்துக்காக அக்கா கட்டித்தந்து விட்ட சோறும் உறைப்புடனான இறைச்சிக் கறியும், பச்சை மிளகாயும் சேர்த்த சாப்பாட்டுப் பார்சல் எனது காலிடுக்கில் கிடந்தது. அந்த இனிப்புப் பதார்த்தத்தை தின்று சத்தி வருவது போலவுமிருந்தது.

' வேண்டாம் இது எனக்கு விருப்பமில்லை ' என்று அவரிடம் என்னால் சொல்ல முடியாதிருந்தது.
ஏன்?
அவர் இன்னுமின்னும் அன்புடன் சாப்பிடச் சொன்னார். நானும் மறுக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இன்றைய எனது சொகுசுப் பயணம் இப்படிக் கழிந்ததே என்ற ஏக்கம் ஒருபுறம் என்னை வருத்தியது.

அன்போடு இனிப்புப்பாகை வழங்கிய அவருக்கு நானும் ஏதாவது கொடுக்க வேண்டாமா?

எனது சாப்பாட்டுப் பார்சலைத் திறந்தேன். தூளின் கார நெடி மூக்கில் புகுந்தது. ஆகா ! என்ன சுகம்.
' பெற்றுக் கொள்ளுங்கள் ' என்றபடி கரண்டியையும் கொடுத்து சுவைக்கச் சொன்னேன்.

சாப்பாட்டை உற்றுப் பார்த்தார். பின்.... தலையாட்டியபடியே
" தமிழர்கள் காரவகை உணவு உண்பவர்கள் எனக்குத் தெரியும். " ஆனால் நீர் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். முன்பொருதடவை சுவைத்துப் பார்த்திருக்கிறேன். ' எனக்கு இதில் அவ்வளவு விருப்பமில்லை ' என்றபடி மறுத்துக் கொண்டார்.
சரி பரவாயில்லை என்றபடி சாப்பாட்டுப் பார்சலை மூடி வைத்துக் கொண்டேன். ஆனால் எனது மனதை மூடிவைக்கமுடியவில்லை.
இந்த மாஸ்ரர் மறுத்தரைத்தது போல.......
நானும் ஏன் எனது விருப்பத்திற்கு மாறாக அவருக்காக அந்த இனிப்பை தின்று தொலைத்தேன்.
மறுதலிக்க முடியாமற் போனது எனது சுபாவமா?
அல்லது
தமிழர்களின் சுபாவமா?

www.tamilarangam.net

ஏன் எல்லாவற்றிற்கும் இசைந்து போகிறேன்? எனக்கென ஒன்றுமே இல்லையா?

கேள்விகள் தொடர்ந்து தொடர்ந்து பாம்புகள் சிக்குண்டு திரள் வதைப் போல திரண்டன.

புகையிரதம் நின்றது.

நாங்கள் இறங்கிக் கொண்டோம்.

" இன்றைய நாளுக்கு நன்றி. சந்தோசமாக வீடு போய்ச் சேருங்கள். வீட்டில் எல்லோரையும் விசாரித்ததாக சொல்லு !" என்றபடி பிரிந்து போனார் அந்த மாஸ்ரர்.

ஏதோ ஒன்று நின்று போனதைப் போல உணர்வு. மகிழ்ச்சி.

நான் மீண்டும் என்னோடாகிவிட்ட மகிழ்ச்சி. மனைவி பிள்ளைகள் நினைவில் வந்தனர். இலையும் சருகுமாய் கிடக்கும் வீதியில் நடந்து கொண்டிருந்தேன். விருப்பமின்றி தின்று தொலைந்த அந்த இனிப்புப்பாகு குமட்டிக்குமட்டி........ வீதி ஓரமாய் நின்று குனிந்து சத்தி எடுத்தேன்.

இப்போது நல்ல சுகமாக இருந்தது. மீணடும் தூள்க்கறி வாசனையை நினைத்த படி எனது வீடு நோக்கினேன்.

முற்றும்.

## ஏக்கம் !

**கண்மணி !**
**நான் காற்றைப் பிடித்து**
**வைத்திருக்கிறேன்**
**நீ சுவாசிப்பதால் ~ நான்**
**கனவு காண்கிறேன்**
**நீ மட்டும் வருவதால் ~ நான்**
**பாடுகிறேன்**
**பொருள் நீ ஆதலால் ~ நான்**
**காணாமல் போகிறேன்**
**நீ என்னைப் பார்க்காமல்**
**போனதால்......**

- தீபன்.
(ஜேர்மனி)

www.tamilarangam.net

## சஞ்சீவி ஆறு மலர்களுக்கான சந்தாவிபரம்:

| | |
|---|---|
| DENMARK<br>NORWAY<br>SWEEDAN<br>FINLAND | 125 kr. |
| EUROPA<br>AUSTRALIA<br>CANADA<br>USA | 25 kr. |

(அஞ்சற் செலவு உட்பட)

காசோலை, வங்கி க/கு தொடர்புகளுக்கு:

**A/C. No: 7601-408876-9**
**CHANCHIVE , VESTJYSKBANK ,**
**7500 HOLSTEBRO, DENMARK.**

காசோலை அனுப்ப வேண்டிய முகவரி:

**CHANCHIVE, NYGADE 22**
**7500 HOLSTEBRO, DENMARK.**

தபாலக பணக்கட்டளை க/கு இலக்கம்:

**POST GIRO No 3 65 35 28**

" மறுக்கப்பட்டு பழக்கமற்றுப் போனதொரு சுதந்திரமான கருத்துப் பரிமாறலை உருவாக்குவதற்கு எல்லோரதும் கருத்துக்களும் விமர்சனங்களுமே வழி வகுக்கும்."

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்